# சைவநெறி

## ஆசிரியர் வழிகாட்டி

## தரம் 3

(2018 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்துவதற்கானது.)

முன்பிள்ளைப் பருவ விருத்தி மற்றும் ஆரம்பக் கல்வித்துறை
தேசிய கல்வி நிறுவகம்
இலங்கை.
இணையத்தளம் : **www.nie.lk**
மின்னஞ்சல் : **info@nie.lk**

# சைவநெறி

## ஆசிரியர் வழிகாட்டி

## தரம் 3

(2018ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்துவதற்கானது.)

முன்பிள்ளைப் பருவ விருத்தி மற்றும் ஆரம்பக் கல்வித்துறை
தேசிய கல்வி நிறுவகம்
இலங்கை.
இணையத்தளம் : **www.nie.lk**
மின்னஞ்சல் : **info@nie.lk**

**சைவநெறி**
**ஆசிரியர் வழிகாட்டி**
**தரம் 3**

முதற் பதிப்பு 2018
தேசிய கல்வி நிறுவகம்
பதிப்புரிமையுடையது.

முன்பிள்ளைப்பருவ விருத்தி மற்றும் ஆரம்பக் கல்வித்துறை
தேசிய கல்வி நிறுவகம்
இலங்கை.

இணையத்தளம் : **www.nie.lk**

மின்னஞ்சல் : **info@nie.lk**

பதிப்பு : இந்நூல் கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தினால்

.......................................................................

அச்சகத்தினால் அச்சிடப்பட்டு,வெளியிடப்பட்டது.

## பணிப்பாளர் நாயகம் அவர்களின் செய்தி

2007 ஆம் ஆண்டு நடைமுறையிலிருந்த உள்ளடக்கத்தை அடிப்படையாகக் கொண்ட பாடவிதானத்தை நவீனப்படுத்தி, தேசிய கல்வி நிறுவகம், ஆரம்ப, இடைநிலை கல்விப் பரப்புகளின் எட்டு வருட சுழற்சி முறையான, புதிய தேசியமட்டப் பாடவிதானத்தின் முதல் பாகத்தினை அறிமுகப்படுத்தியது. தேசிய கல்வி ஆணைக்குழுவினால் முன்மொழியப்பட்ட தேசிய கல்வி இலக்குகளை அடிப்படை நோக்காகக் கொண்டு, இது செயற்படுத்தப்பட்டதுடன் பொதுத் தேர்ச்சிகளை விருத்தி செய்து வந்தது.

பல்வேறுபட்ட கல்வியாளர்களால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளினதும், கருத்துக்களினதும் பொருத்தப்பாட்டுடன் பகுத்தறிவு வாதத்தினை அடிப்படையாகக் கொண்டு பாடவிதானம் நடைமுறைப்படுத்தப்பட்டது. அதன் தொடர்ச்சியாகப் பாடவிதானச் சுழற்சியின் இரண்டாம் பாகம் 2015 ஆம் ஆண்டில் இருந்து கல்வி முறையில் அறிமுகப்படுத்தப்பட்டு வருகின்றது.

இந்தப் பகுத்தறிவுவாத நடைமுறையின் கடை நிலையில் இருந்து உயர்நிலை வரை அனைத்துப் பாடங்களிலும் ஒழுங்குபடுத்தப்பட்ட முறையில் தேர்ச்சிகளை வளர்த்தெடுப்பதற்காக, கீழிருந்து மேல்நோக்கிய நடைமுறைப்படுத்தப்படும் அணுகுமுறை பயன்படுத்தப்படுகிறது. ஒரே பாடத்தின் உள்ளடக்கத்தினை ஏனைய பாடங்களிலும் மீண்டும் பாவிப்பதனைக் குறைப்பதற்காகவும், பாடத்தின் நோக்கங்களை மட்டுப்படுத்துவதற்காகவும், செயற்படுத்தக்கூடியதான மாணவர் மையப் பாடவிதானம் ஒன்றை உருவாக்கும் நோக்கிலும் கிடையான ஒருங்கிணைப்பானது செயற்பட்டு வருகின்றது.

ஆசிரியர்களிற்கு, அவர்களது வகுப்பறைக் கற்பித்தல்களை வழிப்படுத்துவதற்கு அவசியமான வழிகாட்டுதல்களை வழங்குவதற்காகவும், தங்களைக் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளில் பொருத்தப்பாட்டுடன் ஈடுபடுத்திக்கொள்வதற்காகவும், வகுப்பறை அளவீடுகளையும் மதிப்பீடுகளையும் பொருத்தமாகப் பயன்படுத்திக் கொள்வதனை நோக்கமாகக் கொண்டு புதிய ஆசிரிய வழிகாட்டி நூல்கள் அறிமுகப்படுத்தப்படுகிறது. இந்த வழிகாட்டி. நூல்கள், ஆசிரியரை ஒரு பொருத்தப்பாடுடைய ஆசிரியராக வகுப்பறையில் செயற்பட வைக்கின்றது.

இந்த வழிகாட்டி நூல்களினூடாக, ஆசிரியர்கள் தங்கள் மாணவர்களின் தேர்ச்சிகளை வளர்த்தெடுக்கத் தேவையான தர உள்ளீடுகளையும், செயற்பாடுகளையும் தாங்களாகவே தெரிந்தெடுக்கும் சுதந்திரத்தினையும் பெற்றுக்கொள்கின்றனர். விதந்துரைக்கப்பட்ட பாடப்பரப்புக்களின் பாரிய சுமைகள் இல்லாதொழிக்கப்படுகிறது. ஆதலால், இப்புதிய ஆசிரிய வழிகாட்டி நூல்கள் முழுப்பயன்பாடு உடையவையாவதற்கு, கல்வி வெளியீட்டாளர்களினால் வெளியிடப்படும் விதந்துரைக்கப்பட்ட பாட நூல்களின் உச்சப்பயன் பாட்டினைப் பெற்றுக்கொள்வது அவசியமாகின்றது.

இப்புதிய பகுத்தறிவுவாத பாடவிதானத்தினதும், புதிய ஆசிரிய வழிகாட்டி நூல்கள், புதிய பாடநூல்களினதும் அடிப்படைக் குறிக்கோள், மாணவர்களை ஆசிரிய மையக் கல்வியிலிருந்து விடுவித்து, செயற்பாடுகளுடன் கூடிய மாணவர் மையக்கல்வியினை நடைமுறைப்படுத்தக்கூடிய கல்வி முறைமையினால், பூகோள தொழில் சந்தைகளுக்கு தேவையான தேர்ச்சிகளும் திறன்களும் மிக்க மனித வளத்தினை வழங்கக்கூடிய மாணவர் களின் எண்ணிக்கையினை விருத்தி செய்யக்கூடியதாயிருத்தலேயாகும்.

இந்தச் சந்தர்ப்பத்தில் இந்நிறுவகப் பேரவையின் அங்கத்தவர்களுக்கும், கல்வி அலுவல்கள் சபையின் அங்கத்தவர்களுக்கும், இவ்வாசிரியர் வழிகாட்டி நூல்களின் உருவாக்கத்திற்குப் பங்களிப்புச் செய்த வளவாளர்களுக்கும் மற்றும் இவ்வுயரிய நோக்கத்திற்காக அர்ப்பணிப்புடன் பணியாற்றிய அனைவருக்கும் எனது நன்றிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**கலாநிதி. திருமதி. ஜெயந்தி குணசேகர**
பணிப்பாளர் நாயகம்
தேசிய கல்வி நிறுவகம்
மகரகம.

## பிரதிப் பணிப்பாளர் நாயகம் அவர்களின் செய்தி

கற்றல் என்பது பரந்து விரிந்து செல்வதொன்றாகும். அது வாழ்க்கையை மேம்படுத்தவும் எளிமைப்படுத்தவும் வல்லது. மனிதன் கற்கும் ஆற்றலில் உச்ச நிலையில் உள்ளான். மனித, சமூக அபிவிருத்தியை மையமாகக் கொண்ட எந்தவொரு நாடும் அதன் சமூகமும் அறிவாற்றலினால் இனங்கண்ட, நியாயமற்றவற்றைக் களைந்து, நல்லவற்றைப் பயன்படுத்தி புத்துலகைப் படைப்பதற்கான கருவியாக அமைவது கல்வியாகும்.

கற்றலுக்காகப் பெறுமதி மிக்கவை எவையோ அவையும் கற்றல் முறையியல்களும் வசதிகளும் கல்வியைச் சூழ உருவாதல் வேண்டும். இவ்வகையில், கலைத்திட்டத்தில் அடங்குகின்ற பாடத்திட்டம், ஆசிரியர் வழிகாட்டி, வசதி செய்து கொடுப்போர் (Facilitator) போன்றவை எல்லாம் கல்வித்துறையில் சேர்ந்து கொள்கின்றன.

இலங்கையின் பண்டைய அருஞ்செல்வங்களையும் நவீன செல்நெறிகளையும் உள்வாங்கி, தனது கல்விக் கோலத்தை மேம்படுத்தி வருகின்றது. சமகாலத் தேவைகளுக்கு அமைய, எட்டாண்டுகளுக்கு ஒரு தடவை கல்வி மறுசீரமைப்புகளினூடாக இற்றைப்படுத்தப்படும் கலைத்திட்டத்துக்குரிய ஒரு கற்றல் வளமாக இந்த ஆசிரியர் வழிகாட்டி தயாரிக்கப்பட்டுள்ளது.

பாடக் குறிக்கோள்களின் ஒத்த தன்மையைத் தேசிய மட்டத்தில் பேணப்படுவது அவசியமாகும். எனினும், ஆசிரியர் வழிகாட்டியில் தரப்பட்டுள்ள கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகள் சற்றேனும் மாறுபடாது, அச்சொட்டாகப் பயன்படுத்துவதற்கு உரியவை அல்ல. பாடத்திட்டத்தின் தேர்ச்சிகள், தேர்ச்சி மட்டங்களை அடைவதற்காகப் பாட விடயங்களின் மூலம் கற்றற் பேறுகளை அண்மிப்பதற்காக, கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளை ஆக்கபூர்வமானதாக மாற்றி அமைத்துக் கொள்வதற்கான சுதந்திரம் வசதி செய்து கொடுப்போருக்கு உண்டு என்பதில் எவ்வித ஐயமுமில்லை. மாணவரது அடைவு மட்டத்தை உயர் சதவீதத்துக்கு இட்டுச் செல்ல உதவும் மற்றும் அதற்கான வசதிகளைச் செய்து கொடுக்கும் ஆசிரியரது வகிபாகத்திற்கு உந்துதல் அளிப்பதற்காகத் தயாரிக்கப்பட்டுள்ள இந்த ஆசிரியர் வழிகாட்டியை ஆசிரியர்கள் மட்டுமன்றி, மாணவரும் பெற்றோரும் கூடப் பயன்படுத்த முடியும். குறித்த பாடத்தின் பாட நூலுக்குத் துணையாக அமையும் ஒரு சாதனமான இந்த ஆசிரியர் வழிகாட்டி, மற்றுமொரு பாடநூல் அல்ல என்பதை அறிந்து பாடநூல், ஆசிரியர் வழிகாட்டி ஆகிய இரண்டையும் ஆசிரியர்கள் பயன்படுத்த வேண்டும்.

அந்தந்தப் பாடத்தின் அடைவு தொடர்பாக மதிப்பீடு நடத்தும், தேசிய மட்டப் பரீட்சகர்களால் எதிர்பார்க்கப்படும் அடைவுகளை அண்மிக்கச் செய்தல் வேண்டும். அவ்வகையில் பாடத்தைக் கற்பிப்பதற்கு வழிகாட்டி, வசதிசெய்து கொடுப்பவர்களால் வகுப்பறையில் குறிப்பிட்ட பாடத்துக்குரிய கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டின் இறுதியில் மதிப்பீடு நடத்தப்பட வேண்டும். அவ்வாறான களிப்பூட்டத்தக்க செழுமையான பண்பாட்டைக் கட்டியெழுப்புவதற்கான ஒரு கருவியாக இந்த ஆசிரியர் வழிகாட்டி அமைய வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன்.

**கலாநிதி வண. மாம்புல்கொட சுமணரத்ன தேரர்**
**பிரதிப் பணிப்பாளர் நாயகம்**
மொழிகள், மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம்
தேசிய கல்வி நிறுவகம்.

# முன்னுரை

கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம்
கல்வி வெளியீட்டுத் திணைக்களம்
'இசுறுபாய'
பத்தரமுல்ல.

# கலைத்திட்டக் குழு

| | | |
|---|---|---|
| **அனுமதி** | : | கல்விசார் அலுவல்கள் சபை, தேசிய கல்வி நிறுவகம் |
| **ஆலோசனை** | : | **வண.கலாநிதி மாம்புல்கொட சுமணரத்ன தேரர்**<br>பிரதிப் பணிப்பாளர் நாயகம், தேசிய கல்வி நிறுவகம்.<br><br>**பேராசிரியர். வ. மகேஸ்வரன்**<br>தலைவர், தமிழ்த்துறை<br>பேராதனைப் பல்கலைக்கழகம்.<br><br>**திரு. எம். ஆர். டபிள்யு. மத்தும**<br>பணிப்பாளர்,<br>முன்பிள்ளைப் பருவ விருத்தி மற்றும் ஆரம்பக்கல்வித் துறை,<br>தேசிய கல்வி நிறுவகம்.<br><br>**கலாநிதி. நந்தினி சணமுகலிங்கம்**<br>இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம்<br>கொழும்பு<br><br>**திருமதி லலிதாம்பிகை சண்முகநாதன்**<br>பிரதிக் கல்விப் பணிப்பாளர்<br>ஆரம்பக் கல்விக் கிளை கல்விஅமைச்சு |
| **பாட இணைப்பாக்கம்** | : | **வி. என். எஸ். உதயசந்திரன்**<br>சிரேஷ்ட விரிவுரையாளர்<br>முன்பிள்ளைப் பருவ விருத்தி மற்றும் ஆரம்பக் கல்வித்துறை,<br>தேசிய கல்வி நிறுவகம். |
| **விசேட வளப் பங்களிப்பு** | : | **திருமதி. வானதி காண்டீபன்**<br>முன்னாள் பிரதம செயற்றிட்ட அதிகாரி<br>தேசிய கல்வி நிறுவகம்.<br><br>**திரு.பி.கே. சிவசர்மா**<br>ஆரம்பக்கல்வி ஆசிரிய ஆலோசகர்,<br>வலயக்கல்வி அலுவலகம்<br>திருக்கோவில்.<br><br>**திரு. எஸ். காண்டீபன்**<br>அபிவிருத்தி அலுவலர்<br>கல்வி வெளியீட்டுத் திணைக்களம். |
| **கணினி வடிவமைப்பு** | : | **திரு. கே. ஜெயகாந்தன்** |
| **பதிப்பு** | : | **திரு.வி.என்.எஸ்.உதயசந்திரன்,**<br>சிரேஷ்ட விரிவுரையாளர்,<br>முன்பிள்ளைப் விருத்தி மற்றும் ஆரம்பக் கல்வித்துறை,<br>தேசிய கல்வி நிறுவகம். |

# அறிமுகம்

தேசிய குறிக்கோள்களை நிறைவேற்றிக் கொள்வதற்கான அடிப்படைத் தேர்ச்சிகளிடையே, சமய மற்றும் விழுமியங்களுக்குரிய தேர்ச்சிகளைப் பிள்ளைகளிடையே கட்டியெழுப்புவது சமய பாடத்தின் எதிர்பார்ப்பாகும்.

சிறு குழந்தையின் பிஞ்சு மனதிலே புதியதோர் விடயத்தை விதைப்பது இலகுவானதொன்றாகும். அவ்வாறே, நற்பழக்க வழக்கங்களுக்குப் பிள்ளைகளை இசைவுபடுத்துவதும் இலகுவில் ஆற்றக் கூடியவொன்றாகும். சிறு பிள்ளைகளில் காணப்படும் பண்புகளுக்குப் பொருந்தும் வகையில் இங்கு பல்வேறு செயற்பாடுகள் முன்வைக்கப்பட்டுள்ளன. பாட உள்ளடக்கத்திற்குப் பொருத்தமாகப் பிள்ளைகளுக்கு உரிய தேர்ச்சியைப் பெற்றுக்கொடுப்பதற்கும் கற்றல் பேறுகளை அடைந்து கொள்வதற்கும் அச்செயற்பாடுகள் உங்களுக்கு வழிகாட்டும் என நம்புகின்றோம்.

சமூகத்தில் சமாதானம் மற்றும் ஒழுக்கம் உருவாகுவதற்குச் சமயங்களினது பங்களிப்பு அத்தியாவசியமாகும். பல விதங்களிலும் வலுவூட்டப்படும் நல்வாழ்வுக்குச் சமயம் வழிவகுக்கின்றது. சமூகத்தில் நற்பண்புகளுடனும் கௌரவத்துடனும் வாழ்வதன் முக்கியத்துவத்தைச் சமயம் எமக்கு அளிக்கின்றது. அதுமட்டுமல்லாது, எமது நம்பிக்கையின் அடிப்படையில் மரணத்தின் பின்னர் நிலையான வாழ்வு கிடைக்கவும் சமயம் வழிகாட்டுகின்றது.

ஆரம்பப் பிரிவு மாணவர்களிடத்திலிருந்தே சிறந்த சமூகமொன்றினைக் கட்டியெழுப்பும் செயற்பாட்டினை ஆரம்பித்தல் வேண்டும். இச் செயற்பாடுகளை ஆரம்பித்து, பாரிய பங்களிப்பினைச் செய்யவிருக்கும் அதிஷ்டசாலி ஆசிரியர் நீங்கள் ஆவீர்கள். ஆகவே, உங்களால் வழங்கப்படுகின்ற ஒத்துழைப்பினைப் பெரிதும் மதிக்கின்றோம்.

## தேசிய இலக்குகள்

தேசிய கல்வி முறைமையானது, தனிநபர்க்கும் சமூகத்திற்கும் பொருத்தமான பெரும்பாலான தேசிய இலக்குகளை அடைவதற்குத் தனிநபர்களுக்கும் குழுவினருக்கும் உதவி செய்தல் வேண்டும்.

கடந்த காலங்களில் இலங்கையின் பெரும்பாலான கல்வி அறிக்கைகளும் ஆவணங்களும் தனிநபர் தேவைகளையும் தேசிய தேவைகளையும் நிறைவு செய்வதற்காக இலக்குகளை நிர்ணயித்துள்ளன. சமகால கல்வி அமைப்புகளிலும் செயன்முறைகளிலும் வெளிப்படையாகக் காணப்படும் பலவீனங்கள் காரணமாக, நிலைபேறுடைய மனித விருத்தியின் எண்ணக்கருத்திட்ட வரம்பினுள் கல்வியினூடாக அடையக்கூடிய பின்வரும் இலக்குத் தொகுதியினை தேசிய கல்வி ஆணைக்குழு இனங்கண்டுள்ளது.

1. மனித கௌரவத்தைக் கண்ணியப்படுத்தல் எனும் எண்ணக்கருவுக்குள் தேசியப்பிணைப்பு, தேசிய முழுமை, தேசிய ஒற்றுமை, இணக்கம், சமாதானம் என்பவற்றை மேம்படுத்தல் மூலமும் இலங்கைப் பன்மைச் சமூகத்தின் கலாசார வேறுபாட்டினை அங்கீகரித்தல் மூலமும் தேசத்தைக் கட்டி எழுப்புதலும் இலங்கையர் எனும் அடையாளத்தை ஏற்படுத்தலும்.

2. மாற்றமுறும் உலகத்தின் சவால்களுக்குத் தக்கவாறு முகங்கொடுத்தலோடு, தேசிய பாரம்பரியத்தின் அதி சிறந்த அம்சங்களை அங்கீகரித்தலும் பேணுதலும்.

3. மனித உரிமைகளுக்கு மதிப்பளித்தல், கடமைகள், கட்டுப்பாடுகள் பற்றிய விழிப்புணர்வு, ஒருவர் மீது ஒருவர் கொண்டுள்ள ஆழ்ந்த, இடையறாத அக்கறையுணர்வு என்பவற்றை மேம்படுத்தும் சமூக நீதியும் ஜனநாயக வாழ்க்கைமுறை நியமங்களும் உள்ளடங்கிய சுற்றாடலை உருவாக்குதலும் ஆதரித்தலும்.

4. ஒருவரது உள, உடல் நலனையும் மனித விழுமியங்களுக்கு மதிப்பளிப்பதை அடிப்படையாகக் கொண்ட நிலைபேறுடைய வாழ்க்கைக் கோலத்தையும் மேம்படுத்தல்

5. நன்கு ஒன்றிணைக்கப்பட்ட சமநிலை ஆளுமைக்குரிய ஆக்க சிந்தனை, தற்றுணிபு, ஆய்ந்து சிந்தித்தல், பொறுப்பு, வகைகூறல் மற்றும் உடன்பாடான அம்சங்களை விருத்தி செய்தல்.

6. தனிநபரதும் தேசத்தினதும் வாழ்க்கைத் தரத்தைப் போஷிக்கக் கூடியதும் இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்குப் பங்களிக்கக் கூடியதுமான ஆக்கப் பணிகளுக்கான கல்வியூட்டுவதன் மூலம் மனிதவள அபிவிருத்தியை ஏற்படுத்தல்.

7. தனிநபர்களின் மாற்றத்திற்கு ஏற்ப, இணங்கி வாழவும் மாற்றத்தை முகாமை செய்யவும் தயார்படுத்தவும் விரைவாக மாறிவரும் உலகில் சிக்கலானதும், எதிர்பாராததுமான நிலைமைகளைச் சமாளிக்கும் தகைமையை விருத்தி செய்தல்.

8. நீதி, சமத்துவம், பரஸ்பர மரியாதை என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு, சர்வதேச சமுதாயத்தில் கௌரவமானதோர் இடத்தைப் பெறுவதற்குப் பங்களிக்கக்கூடிய மனப்பாங்குகளையும் திறன்களையும் வளர்த்தல்.

**(தேசிய கல்வி ஆணைக்குழு அறிக்கை - 2003 மார்கழி)**

## அடிப்படைத் தேர்ச்சிகள்

கல்வியினூடாக விருத்தி செய்யப்படும் பின்வரும் அடிப்படைத் தேர்ச்சிகள் மேற்குறித்த தேசிய இலக்குகளை அடைவதற்கு வழிவகுக்கும்.

### (i) தொடர்பாடல் தேர்ச்சிகள்

தொடர்பாடல் பற்றிய தேர்ச்சிகள் நான்கு துணைத் தொகுதிகளை அடிப்படையாகக் கொண்டவை. எழுத்தறிவு, எண்ணறிவு, சித்திர அறிவு, தகவல் தொழில்நுட்பத் தகைமை:

எழுத்தறிவு : கவனமாகச் செவிமடுத்தல், தெளிவாகப் பேசுதல், கருத்தறிய வாசித்தல், சரியாகவும் செம்மையாகவும் எழுதுதல், பயன்தருவகையிலான கருத்துப் பரிமாற்றம்.

எண்ணறிவு : பொருள், இடம், காலம் என்பவற்றுக்கு எண்களைப் பயன்படுத்தல், எண்ணுதல், கணித்தல், ஒழுங்கு முறையாக அளத்தல்.

சித்திர அறிவு : கோடு, உருவம் என்பவற்றின் கருத்தை அறிதல் விபரங்கள், அறிவுறுத்தல்கள், எண்ணங்கள் ஆகிய வற்றைக் கோடு, உருவம், வர்ணம் என்பவற்றால் வெளிப்படுத்தலும் பதிவு செய்தலும்.

தகவல் தொழினுட்பத் தகைமை : கணினி அறிவு, கற்றலில், தொழில் சுற்றாடலில், சொந்த வாழ்வில் தகவல் தொடர்பாடல் தொழில் நுட்பங்களைப் (ICT) பயன்படுத்தல்.

### (ii) ஆளுமை விருத்தி தொடர்பான தேர்ச்சிகள்

- ஆக்கம், விரிந்த சிந்தனை, தற்றுணிபு, தீர்மானம் எடுத்தல், பிரச்சினை விடுவித்தல், நுணுக்கமான மற்றும் பகுப்பாய்வுச் சிந்தனை, அணியினராகப் பணி செய்தல், தனியாள் இடைவினைத் தொடர்புகள், கண்டுபிடித்தலும் கண்டறிதலும் முதலான திறமைகள்.
- நேர்மை, சகிப்புத்தன்மை, மனித கௌரவத்தைக் கண்ணியப்படுத்தல் ஆகிய விழுமியங்கள்.
- மன எழுச்சிகள், நுண்ணறிவு

### (iii) சூழல் தொடர்பான தேர்ச்சிகள்

இத்தேர்ச்சிகள் சூழலோடு தொடர்புறுகின்றன. சமூகம், உயிரியல், பௌதிகம்

சமூகச் சூழல் : தேசிய பாரம்பரியம் பற்றிய விழிப்புணர்வு, பன்மைச் சமூகத்தின் அங்கத்தவர்கள் என்ற வகையில் தொடர்புறும் நுண்ணுணர்வுத் திறன்களும், பகிர்ந்தளிக்கப்படும் நீதி, சமூகத் தொடர்புகள், தனிநபர் நடத்தைகள், பொதுவானதும் சட்டபூர்வமானதுமான சம்பிரதாயங்கள், உரிமைகள், பொறுப்புக்கள், கடமைகள், கடப்பாடுகள் என்பவற்றில் அக்கறையும்.

உயிரியல் சூழல் : வாழும் உலகு, மக்கள், உயிரியல் சூழல் தொகுதி - மரங்கள், காடுகள், கடல், நீர், வளி, உயிரினத் தாவரம், விலங்கு, மனித வாழ்வு.

பௌதிகச் சூழல் : இடம், சக்தி, எரிபொருள், சடப்பொருள், பொருள்கள் பற்றியும் அவை மனித வாழ்க்கை, உணவு, உடை, உறையுள், சுகாதாரம், சௌகரியம், சுவாசம், நித்திரை, இளைப்பாறுதல், ஓய்வு, கழிவுகள், உயிரின கழிவுப் பொருட்கள் ஆகியவற்றுடன் கொண்டுள்ள தொடர்பு பற்றிய விழிப்புணர்வும், நுண்ணுணர்வுத் திறன்களும் கற்றலுக்கும் வேலை செய்வதற்கும் வாழ்வதற்கும் கருவிகளையும் தொழில் நுட்பங்களையும் பயன்படுத்தும் திறன்களும் இங்கு உள்ளடக்கப்பட்டுள்ளன.

**(iv) வேலை உலகிற்குத் தயார் செய்தல் தொடர்பான தேர்ச்சிகள்**

அவர்களது சக்தியை உச்ச நிலைக்குக்கொண்டு வருவதற்கும் அவர்களது ஆற்றலைப் போஷிப்பதற்கும் வேண்டிய தொழில்சார் திறன்கள் பொருளாதார விருத்திக்குப் பங்களித்தல்; அவர்களது தொழில் விருப்புகளையும் உளச்சார்புகளையும் கண்டறிதல்; அவர்களது ஆற்றல்களுக்குப் பொருத்தமான வேலையைத் தெரிவு செய்தல்; பயனளிக்கக் கூடியதும் நிலைபேறுடையதுமான சீவனோபாயத்தில் ஈடுபடல்.

**(v) சமயமும் ஒழுகலாறும் தொடர்பான தேர்ச்சிகள்**

அன்றாட வாழ்க்கையில் மிகப் பொருத்தமானவற்றைத் தெரிவு செய்யவும், நாளாந்த வாழ்க்கையில் ஒழுக்கநெறி, அறநெறி, சமயநெறி தொடர்பான நடத்தைகளைப் பொருத்தமுற மேற்கொள்ளவும் விழுமியங்களைத் தன்மயமாக்கிக் கொள்ளலும் உள்வாங்கலும்.

**(vi) ஓய்வு நேரத்தைப் பயன்படுத்தல், விளையாட்டு பற்றிய தேர்ச்சிகள்**

அழகியற் கலைகள், இலக்கியம், விளையாட்டு, மெய்வல்லுநர் போட்டிகள், ஓய்வு நேரப் பொழுதுபோக்குகள் மற்றும் வாழ்வின் ஆக்கபூர்வச் செயற்பாடுகள் மூலம் வெளிப்படுத்தப்படும் இன்ப நுகர்ச்சி, மகிழ்ச்சி, மனவெழுச்சிகள் இவை போன்ற மனித அனுபவங்கள்.

**(vii) "கற்றலுக்குக் கற்றல்" தொடர்பான தேர்ச்சிகள்**

விரைவாக மாறுகின்ற, சிக்கலான, ஒருவரில் ஒருவர் தங்கி நிற்கின்ற உலகொன்றில் ஒருவர் சுயாதீனமாகக் கற்பதற்கான வலிமையளித்தலும் மாற்றியமைக்கும் செயன்முறை ஊடாக மாற்றத்திற்கேற்ப இயங்கவும் அதனை முகாமை செய்யவும் வேண்டிய உணர்வையும் வெற்றியையும் பெறச்செய்தல்.

# ஆரம்பக் கல்வித் திட்டம் - 2016

**அடிப்படைத் தேர்ச்சிகள்**

- தொடர்பாடல் தேர்ச்சிகள்
- ஆளுமை விருத்தி தொடர்பான தேர்ச்சிகள்
- சூழல் தொடர்பான தேர்ச்சிகள்
- வேலை உலகிற்குத் தயார் செய்தல் தொடர்பான தேர்ச்சிகள்
- சமயமும் ஒழுகலாறும் தொடர்பான தேர்ச்சிகள்
- ஓய்வு நேரத்தைப் பயன் படுத்தல், விளையாட்டு பற்றிய தேர்ச்சிகள்
- ‘‘கற்றலுக்குக் கற்றல்’’ தொடர்பான தேர்ச்சிகள்

**பிள்ளைகளை அறிந்து கொள்வோம்**

**முதன்மை நிலை 1**

தரம் 1 | தரம் 2

- தாய்மொழி
- இரண்டாவது தேசிய மொழி
- கணிதம்
- சமயம்

செயற்பாடு சார்ந்த வாய்மொழி ஆங்கிலம்

சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள்

இணைப்பாடவிதானச் செயற்பாடுகள்

**முதன்மை நிலை 1 இன் அத்தியாவசியத் தேர்ச்சிகளை எய்தியமையை உறுதிப்படுத்தல்**

**முதன்மை நிலை 2**

தரம் 3 | தரம் 4

- தாய்மொழி
- ஆங்கிலம்
- இரண்டாவது தேசிய மொழி
- கணிதம்
- சமயம்

செயற்பாடு சார்ந்த வாய்மொழி ஆங்கிலம்

சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள்

இணைப்பாடவிதானச் செயற்பாடுகள்

**முதன்மை நிலை 2 இன் அத்தியாவசியத் தேர்ச்சிகளை எய்தியமையை உறுதிப்படுத்தல்**

**முதன்மை நிலை 3**

தரம் 5

- தாய்மொழி
- ஆங்கிலம்
- இரண்டாவது தேசிய மொழி
- கணிதம்
- சமயம்

செயற்பாடு சார்ந்த வாய்மொழி ஆங்கிலம்

சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள

பிள்ளையின் விருப்புக்கும் சிந்தனைக்குமான தெரிவுப்பாடம்

இணைப்பாடவிதானச் செயற்பாடுகள்

**முதன்மை நிலை 3 இன் அத்தியாவசியத் தேர்ச்சிகளை எய்தியமையை உறுதிப்படுத்தல்**



# முதன்மை நிலை இரண்டு

## (தரம் 3)

| | பாடம் | வாரத்திற்கான நேர ஒதுக்கீடு |
|---|---|---|
| 1. | தாய் மொழி | 5.00 மணித்தியாலங்கள் |
| 2. | கணிதம் | 5.00 மணித்தியாலங்கள் |
| 3. | சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள் | 6.00 மணித்தியாலங்கள் |
| 4. | ஆங்கிலம் | 3.00 மணித்தியாலங்கள் |
| 5. | இரண்டாம் தேசிய மொழி | 1.00 மணித்தியாலங்கள |
| 6. | காலைக் கூட்டமும் சமய அனுட்டானமும் | 1.15 மணித்தியாலங்கள் |
| 7. | சமயம் | 2.00 மணித்தியாலங்கள் |
| 8. | உணவு வேளை (இடைவேளை) | 1.40 மணித்தியாலங்கள் |
| 9. | உடலியக்கச் செயற்பாடுகள் | 2.05 மணித்தியாலங்கள் |
| 10. | இணைப்பாடவிதானச் செயற்பாடுகள் | 30 நிமிடங்கள் (வாரம் ஒருநாள்) |
| வாரத்திற்கான மொத்தக் காலம் | | **27 மணித்தியாலங்கள் 30 நிமிடங்கள்** |

## ஆசிரியர் வழிகாட்டியைப் பயன்படுத்துவதற்கான ஆலோசனைகள்

ஆரம்பக் கல்வி பயிலும் சைவ சமயச் சிறார்கள் தமது அன்றாட வாழ்க்கைக்குப் பொருத்தமான சைவ சமய ஒழுக்கம், அறநெறி தொடர்பான நடத்தைகளைப் பொருத்தமுறக் கடைப்பிடிக்கவும் நல்ல விழுமியப் பண்புகளைத் தன்மயமாக்கிக் கொள்ளவும் உள்வாங்கிக் கொள்ளவும் உறுதுணையாக அமையும் விதமாக தரம் 3 சைவநெறிப் பாடத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. மேலும், சமயக்கல்வி தொடர்பான கற்றல் - கற்பித்தற் செயற்பாடுகளில் தெளிவான மாற்றத்தை ஏற்படுத்தக் கூடியதாகவும் இப் பாடத்திட்டம் அமையப்பெற்றுள்ளது. பாடத்திட்டத்தில் உள்ள சமய எண்ணக்கருக்களையும் பழக்க வழக்கங்களையும் அறிவு ரீதியாக மட்டுமன்றி, அனுபவ ரீதியாகவும் மாணவர் பெற்று, சமூகப் பண்பாடுகளுடன் ஒழுக்க, விழுமியப் பண்புகளைக் கொண்டவர்களாக வளர வழிகாட்டுவதே இந்த ஆசிரியர் வழிகாட்டியின் பிரதான எதிர்பார்ப்பாகும்.

**ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கான சைவநெறிப் பாடத்துக்கான தேர்ச்சிகள் வருமாறு:**

1. தமது அன்றாட வாழ்க்கையில் இறை சிந்தனையுடன் சமய ஒழுகலாறுகளைக் கடைப்பிடிப்பார்.
2. பெற்றோர், பெரியோர்களுக்குப் பணிந்து அவர்களுக்கு மதிப்பளிப்பார்.
3. சமய வழிபாட்டு முறைகளை விதிப்படி கடைப்பிடிப்பார்.
4. தோத்திரப் பாடல்களையும், அறநெறி உணர்த்தும் பாடல்களையும் பாடுவார்.
5. கதைகள் ஊடாகச் சமய உணர்வு, நம்பிக்கை என்பவற்றை விருத்திசெய்து கொள்வார்.
6. நாயன்மார்களதும் அருளாளர்களதும் வாழ்வினை முன்மாதிரியாகக் கொண்டு ஒழுகுவார்.
7. சமய வழக்காறுகளையும், ஒழுகலாறுகளையும், விழுமியங்களையும் அறிந்து அவற்றைக் கடைப்பிடிப்பார்.

**கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள்**

தரம் 1 – 5 வரை சைவ சமய பாடத்துக்கான கற்றல் - கற்பித்தலை மேம்படுத்துவதற்காக, தேவையான இடங்களில் பொருத்தமான அணுகு முறைகளைக் கையாளுதல் நன்று. அத்துடன் ஆசிரியர் முன்மாதிரியாகச் செயற்படுத்தல் எதிர்பார்க்கப்படுகின்றது. எடுத்துக்காட்டாகச் சில அணுகுமுறைகள் கீழே தரப்படுகின்றன.

- கதை கூறல் (சமயக் கதைகள், நாயன்மார் வாழ்வு பற்றிய கதைகள் போன்றன)
- நடித்துக் காட்டல் (சமயக் கதைகள், நிகழ்வுகள் போன்றன)
- செய்து காட்டல் (வழிபாட்டு முறைகள்)
- மாதிரிகள் அமைத்தல் (வணங்கும் இடம் அமைத்தல்)
- பாவனை செய்தல் (நாயன்மார் வாழ்வு - சிவனடியார் வாழ்வு)
- செயற்பாடுகளில் ஈடுபடுதல் (பகிர்ந்துண்ணல், ஏழைகளுக்கு உதவுதல்)
- மனனம் செய்தல் (சிவமந்திரம், திருமுறைகள், ஆத்திசூடி, கொன்றைவேந்தன், உலகநீதி - ஓதுதல்)
- இசையுடன் பாடுதல் (திருமுறைகள், ஆத்திசூடி, கொன்றைவேந்தன், உலகநீதி போன்ற பனுவல்கள்)
- கலந்துரையாடுதல் (சேகரிக்க வேண்டிய பூசைப் பொருட்கள், தமது ஊரிலுள்ள ஆலயங்கள்)
- வெளிக்களப் பயணம் (ஊரிலுள்ள ஆலயங்கள்)
- நடித்துக் காட்டல் (சமயக் கதைகள், நாயன்மார் வாழ்வு போன்ற கதைகள்)
- ஆசிரியர் முன்மாதிரியாக நடத்தல் (தினசரி காலைப் பிரார்த்தனையில் பங்குகொள்ளும் செயற்பாடுகள்)
- சிரமதானம், பொதுப்பணி போன்ற செயற்பாடுகளில் ஈடுபடுதல்

இவ்வாறான செயற்பாடுகளுடன் கூடிய மகிழ்ச்சியான கற்றல் - கற்பித்தல் முறைகளைக் கையாளுவதன் மூலம் மாணவரிடையே உற்சாகத்தையும் வழிகாட்டலையும் ஏற்படுத்தமுடியும்.

# உள்ளடக்கம்

பக்கம்


01. பணிப்பாளர் நாயகம் அவர்களின் செய்தி iii

02. பிரதிப் பணிப்பாளர் நாயகம் அவர்களின் செய்தி v

03. முன்னுரை vi

04. கலைத்திட்டக் குழு vii

05. அறிமுகம் viii

06. தேசிய இலக்குகள் ix

07. அடிப்படைத் தேர்ச்சிகள் x

08. ஆரம்பக் கல்வித் திட்டம் xii

09. நேர ஒதுக்கீடு xiii

10. ஆசிரியர் வழிகாட்டியைப் பயன்படுத்துவதற்கான ஆலோசனைகள் xiv

11. உள்ளடக்கம் xv

11. பாடத்திட்டம் xvi

12. பாடத்திட்டத்தின் நோக்கம் xvii

13. கற்றல் - கற்பித்தற் செயற்பாடுகளுக்கான வழிகாட்டல் 1 – 44

14. சைவ மாணவர்கள் கடைப்பிடிக்க வேண்டியவை 45

15. மாணவர் முன்னேற்றத்தைக் கணிப்பிடல் 46– 49

# பாடத்திட்டம்

# பாடத்திட்டத்தின் நோக்கம்

1. இறை நம்பிக்கையையும் பக்தியையும் ஏற்படுத்துதல்.

2 சைவ சமய அடிப்படை உண்மைகளை விளங்கி அதன்படி வாழ்வதற்கு உதவுதல்.

3 சமய நடைமுறைகளையும் ஒழுக்க, விழுமியப் பண்புகளையும் கடைப்பிடித்து வாழ்வதற்கு வழிப்படுத்தல்.

4. சைவ அடியார்கள், பெரியார்கள் வரலாற்றையும் தொண்டுகளையும் அறியச்செய்து அவர்களை முன்மாதிரியாகக்கொண்டு வாழ்வதற்கு வழிகாட்டுதல்.

5. பொது வாழ்க்கைப் பண்புகளையும் சமய நம்பிக்கைகளையும் பின்பற்றச் செய்தல்.

6 ஏனைய சமயங்களையும் அவற்றின் பண்பாடுகளையும் மதித்து அவர்களுடன் ஒற்றுமையாக வாழும் மனப்பாங்கை ஏற்படுத்தல்.

7. சமயப்பற்றை விருத்திசெய்து முன்மாதிரியான சைவப் பிள்ளையாக வாழ்வதற்குப் பயிற்றுவித்தல்.

8. தோத்திரப் பாடல்களைப் பொருளுணர்ந்து பாடுவதற்கு வழிப்படுத்தல்.

9. ஆலயத் தொண்டுகளில் ஈடுபடுவதற்கும், முறைப்படி வழிபாடுகளில் ஈடுபடுவதற்கும் பயிற்றுவித்தல்.

10. இறைவனால் படைக்கப்பட்ட உயிர்களிடத்தே அன்பு காட்டி வாழ்வதற்கும் சுற்றாடலைப் பேணி வாழ்வதற்கும் பயிற்றுவித்தல்.

# பாடத்திட்டம்

| தொனிப்பொருள் | தேர்ச்சி | விடய உள்ளடக்கம் |
|---|---|---|
| 1. கடவுள் நம்பிக்கை | 1. தமது அன்றாட வாழ்க்கையில் இறை சிந்தனையுடன் சமய ஒழுகலாறுகளைக் கடைப்பிடிப்பார். | 1.1 கடவுளை வணங்கிக் கருமமாற்றுதல்<br>- ஆனைமுகன்<br>1.2 கடவுளின் இயல்புகள் (சிவபெருமான்)<br>- அன்பே சிவம்<br>1.3 இறை சிந்தனையை விருத்தி செய்தல் (உமாதேவியார்)<br>- அம்மையப்பர் |
| 2. வாழ்விற் சைவம் | 2. பெற்றோரே எமது கண்கண்ட தெய்வங்கள் என்பதை ஏற்று நடப்பார். | 2.1 பெற்றோரைப் போற்றுதல்<br>- தாய், தந்தையர்<br>- மூத்தோர் |
| 3. சமய நம்பிக்கையும் வழிபாடும் | 3. சமய வழிபாட்டு முறைகளைக் கடைப்பிடிப்பார். | 3.1 வீட்டில் வழிபாடு<br>- விளக்கேற்றல்<br>3.2 நாளாந்தச் சமயக் கடமைகள்<br>- சிவசின்னங்கள்<br>விபூதி<br>உருத்திராக்கம்<br>3.3 பண்டிகை<br>- தீபாவளி<br>3.4 ஆலய வழிபாடு<br>- ஆலயத்தில் நடந்துகொள்ளும் முறைகள்<br>- ஆலயத் தொண்டுகள்<br>- ஆலய வரலாறு<br>திருக்கோணேச்சரம்<br>3.5 பாடசாலையில் சமய வழிபாடு<br>- தினசரி காலைப் பிரார்த்தனை<br>- பூ மரங்களை வளர்ப்போம்<br>- நவராத்திரி (ஏடு தொடக்கல்) |
| 4.0 தோத்திரப் பாடல்களும் அறநெறிப் பாடல்களும் | 4.1 தோத்திரப் பாடல்களைப் பாடுவார். | 4.1 தேவாரம்<br>"காதலாகிக் கசிந்து .....<br>"இல்லக விளக்கது .....<br>"அன்னம் பாலிக்கும் ....<br>"பொன்னார் மேனியனே ....<br><br>திருவாசகம்<br>"பூசுவதும் வெண்ணீறு ....<br><br>பெரிய புராணம்<br>"வேதநெறி தழைத்தோங்க.. |

| தொனிப்பொருள் | தேர்ச்சி | விடய உள்ளடக்கம் |
|---|---|---|
| | 4.2 அறநெறி உணர்த்தும் பாடல்களைப் பாடுவார். | 4.2 அறநெறிப் பாடல்கள் உலக நீதி (தெரிவு செய்யப்பட்ட பாடல் அடிகள்) |
| 5.0 சமயக் கதைகள் | 5.0 சமயக் கதைகள் ஊடாக சமய உணர்வு, நம்பிக்கை என்பவற்றை விருத்தி செய்வார். | 5.1 இறை நம்பிக்கையை ஊட்டும் சமயக் கதைகள்<br>- விநாயகர் பெருமை பொள்ளாப் பிள்ளையார்<br>- முருகப்பெருமான் சூரசங்காரம்<br>- கண்ணன் பெருமை காலிங்க நர்த்தனம் |
| 6.0 இறை அடியார்கள் | 6.0 நாயன்மார்களதும் அருளாளர்களதும் வாழ்வினை முன்மாதிரியாகக் கொண்டு ஒழுகுவார். | 6.1 நாயன்மார்களதும் அருளாளர்களதும் வாழ்வினை முன்மாதிரியாகக் கொண்டு ஒழுகுதல்<br>- திருநீற்றின் மகிமை<br>- சுண்ணாம்பு அறையில் அப்பர்<br>- செங்கட்டிகள் பொன்கட்டிகள் ஆனமை |
| 7.0 சமய ஒழுக்கங்களும் விழுமியங்களும் | 7.0 வாழ்க்கை விழுமியங்களை அறிந்து அவற்றைக் கடைப்பிடிப்பார். | 7.1 சமய நற்பண்புகள்<br>- பிறருக்கு உதவுவோம்<br>- உயிர்களிடத்தில் கருணை காட்டுவோம்<br>- உண்மை பேசுவோம்<br>- ஒற்றுமையாய் இருப்போம்<br>- பகிர்ந்துண்போம் |

# கற்றல் - கற்பித்தற் செயன்முறைக்குரிய வழிகாட்டல்

## தொனிப்பொருள் : 1.0 கடவுள் நம்பிக்கை

**தேர்ச்சி :** தமது அன்றாட வாழ்க்கையில் இறைசிந்தனையுடன் சமய ஒழுகலாறுகளைக் கடைப்பிடிப்பார்.

**உள்ளடக்கம் :**

கடவுளை வணங்கிக் கருமமாற்றுதல்

- ஆனைமுகன்

**கற்றற்பேறுகள்**

- பிள்ளையாருக்குப் பல திருநாமங்கள் உள்ளன என்பதை அறிந்து கூறுவார்.
- ஆனைமுகன் என்ற திருநாமத்தின் பொருள் - யானை முகத்தை உடையவர் என்பதை விளக்கிக் கூறுவார்.
- எந்தக் காரியத்தையும் தொடங்குமுன் பிள்ளையாரை "ஓம் கம் கணபதயே நம" எனப் பிரார்த்தனை செய்வார்.
- "ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை" என்ற திருமந்திரப் பாடலைப் பக்தியுடன் பாடி வழிபடுவார்.

**வளங்கள்**

- பிள்ளையாரின் திருவுருவப்படம்
- "ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை" என்ற திருமந்திரப் பாடல்
- இறுவட்டு / கணினி

**கற்றல் கற்பித்தல் அணுகுமுறைகள் :**

**செயற்பாடு 1**

- பிள்ளையாரின் திருவுருவப்படத்தினைக் காட்சிப்படுத்துங்கள்.
- எந்தக் காரியத்தையும் தொடங்குமுன் பிள்ளையாரை வழிபடுவது எமது சமய மரபாகும் என்பதை மாணவருக்கு விளக்கிக் கூறுங்கள்.
- பாதணிகளைக் கழற்றி, கால்களை ஒன்றுசேர்த்து நிமிர்ந்து இருக்கையில் அமருமாறு மாணவருக்குக் கூறுங்கள்.
- கண்களை மூடி, நெஞ்சில் இரு கைகளையும் கூப்பி "ஓம் கம் கணபதயே நம" எனும் கணபதி மூல மந்திரத்தினைக் கூறிப் பிரார்த்தனை செய்ய வழிப்படுத்துங்கள். (தினமும் இவ்வாறு ஒரு நிமிடம் மனதை ஒருநிலைப்படுத்தும் செயற்பாட்டில் மாணவரை ஈடுபடுத்துங்கள்)

**செயற்பாடு 2**

- வகுப்பறைச் சுவாமி மூலையில் பிள்ளையார் வழிபாட்டினை ஏற்பாடு செய்யுங்கள்.
- வகுப்பிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கைக்கேற்ப அவர்களைச் சிறு குழுக்களாக்குங்கள்.
- ஒவ்வொரு குழுவையும் தனித்தனியாக சுவாமி மூலைக்கு அழைத்துச் சென்று நெற்றியில் ஐந்து முறை குட்டி, தோப்புக்கரணம் போட்டு பக்தியுடன் வணங்கிக் காட்டுங்கள்.
- அதேபோல் மாணவர்களையும் பக்தியுடன் தோப்புக்கரணம் போட்டு வழிபடச் சந்தர்ப்பம் அளியுங்கள்.
- தினமும் தோப்புக்கரணம் போட்டு வணங்க ஆர்வமூட்டுங்கள். (தினமும் தோப்புக்கரணம் போடுவது மாணவரின் உடல் ஆரோக்கியத்தை மேம்படுத்துவதுடன் ஞாபக சக்தியையும் வளர்க்கும் என்பதை நினைவிற் கொள்க.)

செயற்பாடு 3

- பிள்ளையாரின் திருவுருவப்படத்தினைக் காட்சிப்படுத்துங்கள்.
- காட்சிப்படுத்தப்பட்ட திருவுருவப்படத்தினை அவதானித்து அவரின் தோற்றம் பற்றிச் சுயமாகக் கூற ஆர்வமூட்டுங்கள்.
- பிள்ளையாரின் தோற்றத்துடன் தொடர்புபடுத்தி ஆனைமுகன், கஜமுகன், வேழமுகன், ஐங்கரன் போன்ற பெயர்கள் அவரின் மறுபெயர்கள் என எடுத்துக் கூறுங்கள்.
- பிள்ளையார் எமக்கு வரும் துன்பங்களை நீக்க வல்லர். ஆதலால் அவருக்கு விக்னேஸ்வர் என்ற பெயரும் உண்டு என எடுத்துக் கூறுங்கள்.
- மாணவர்கள் தாம் அறிந்த பிள்ளையாரின் வேறு பெயர்களையும் கூறுவதற்கு உற்சாகமூட்டுங்கள்.

செயற்பாடு - 4

- மாணவர்களைப் பாதணிகளைக் கழற்றி, கால்களை ஒன்றுசேர்த்து நிமிர்ந்து நின்று நெஞ்சில் இரு கைகளையும் கூப்பி வட்டமாக நிற்கச் செய்யுங்கள்.
- ஆசிரியரும் பாதணிகளைக் கழற்றி கால்களை ஒன்றுசேர்த்து நிமிர்ந்து நின்று நெஞ்சில் இரு கைகளையும் கூப்பி "ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை" என்ற திருமந்திரப் பாடலைப் பக்தியுடன் மாணவர்களுக்குப் பாடிக் காட்டுங்கள்.
- திருமுறைப் பாடல்களைப் பாட முன்பும் பாடிய பின்பும் ''திருச்சிற்றம்பலம்'' கூற வேண்டும் என்பதை நினைவிற் கொள்க.
- இறுவட்டு / கணினி மூலம் திருமந்திரப்பாடலை ஒலிக்கச் செய்யுங்கள்.
- மாணவர்களைக் குழுவாகவும் தனித்தும் பாடலைப் பக்தியுடன் பாட ஊக்கப்படுத்துங்கள். (தினமும் தோப்புக்கரணம் போடுவது மாணவரின் உடல் ஆரோக்கியத்தை மேம்படுத்துவதுடன் ஞாபக சக்தியையும் வளர்க்கும் என்பதை நினைவிற்கொள்க.)

கணிப்பீடு :

- பிள்ளையாரின் மறு பெயர்களைக் கூறுவார்.
- ஆனைமுகன் என்ற பெயர் வரக் காரணம் யாது? என உணர்ந்து கூறுவார்.
- எக் கருமத்தைத் தொடங்கு முன்னும் பிள்ளையாரை வழிபட வேண்டும் என உணர்ந்து கூறுவார்.

நடைமுறை வாழ்வில் பிரயோகித்தல் :

- எக்கருமத்தைத் தொடங்குமுன் பிள்ளையாரை வணங்கிக் கருமமாற்றுதல்
- தினமும் "ஓம் கம் கணபதயே நம" எனும் மூல மந்திரத்தைக் கூறிப் பிரார்த்தனை செய்தல்
- திருமுறைப் பாடல்களைப் பக்தியுடன் சமய நிகழ்வுகளில் பாடுதல்

## தொனிப்பொருள் : 1.0 கடவுள் நம்பிக்கை

**தேர்ச்சி :** தமது அன்றாட வாழ்க்கையில் இறைசிந்தனையுடன் சமய ஒழுகலாறுகளைக் கடைப்பிடிப்பார்.

**உள்ளடக்கம் :**
- கடவுளின் இயல்புகள் (சிவபெருமான்) - அன்பே சிவம்

**கற்றற்பேறுகள் :**
- சிவபெருமான் என்றும் உள்ளவர், எங்கும் நிறைந்தவர் என்பதை அறிந்து கூறுவார்.
- சிவபெருமான் அன்பே உருவானவர் என்பதை எடுத்துக் கூறுவார்.
- சிவபெருமானின் திருவருளைப் பெற அவரைப் பக்தியுடன் வழிபடுவார்.

**வளங்கள் :**
- சிவபெருமானின் திருவுருவப் படம்

**கற்றல் கற்பித்தல் அணுகுமுறைகள் :**

**செயற்பாடு 1**
- மாணவர்களை அரைவட்டமாக அமரச் செய்யுங்கள்.
- சிவபெருமானின் திருவுருவப் படமொன்றைக் காட்சிப்படுத்துங்கள்.
- சிவபெருமானின் தோற்றம், இயல்புகள் பற்றி மாணவர்கள் ஏற்கனவே அறிந்து வைத்திருப்பவை பற்றிக் கலந்துரையாடுங்கள்.
- சிவபெருமான் உயிர்களிடத்தில் அன்பும் இரக்கமும் கொண்டவர் என்பதை விளக்கும் கதைகளை மாணவர் கூறுவதற்கு ஊக்கமளியுங்கள்.
  உதாரணம் : தாயுமானவர், ஞானப்பாலுண்ட சம்பந்தர்.
- அக்கதையின் ஊடாக வெளிப்பட்டுநிற்கும் சிவபெருமானின் இயல்புகளைக் கூறச் செய்யுங்கள்.

**செயற்பாடு 2**
- பாடநூலிலுள்ள ‘‘அன்பே சிவம்’’ என்ற கதையைச் சுருக்கமாகக் கூறுங்கள்.
- “அன்பே சிவம்” கதையை உரிய மெய்ப்பாடுகளுடன் உரத்து வாசியுங்கள்.
- மாணவர்களைச் சோடிகளாக்குங்கள்.
- ஒரு பந்தியை ஒருவர் வாசிக்க மற்றையவர் செவிமடுக்கச் செய்யுங்கள். அதேபோல் மறுபந்தியை செவிமடுத்தவர் வாசிக்க மற்றையவர் கேட்க வழிசெய்யுங்கள்.
- இடர்ப்படும் பிள்ளைகளுக்கு உதவுங்கள்.

**செயற்பாடு 3**
- சோடிகளாக முன்வந்து கூறுவதற்கு வாய்ப்பளியுங்கள்.
- கதையினூடு வெளிப்பட்டு நிற்கும் கடவுளின் இயல்புபற்றிக் கூறச் செய்யுங்கள்.

**கணிப்பீடு :**
- சிவபெருமானின் இயல்புகள் பற்றிக் கூறுவார்.
- “அன்பே சிவம்” கதையைக் கூறுவார்.

**நடைமுறை வாழ்வில் பிரயோகித்தல் :**
- இறைவன் அன்பும் கருணையும் உள்ளவர் என்பதை உணர்ந்து நம்பிக்கையோடு வழிபடுதல்

## தொனிப்பொருள் : 1.0 கடவுள் நம்பிக்கை

**தேர்ச்சி :** தமது அன்றாட வாழ்க்கையில் இறைசிந்தனையுடன் சமய ஒழுகலாறுகளைக் கடைப்பிடிப்பார்.

**உள்ளடக்கம் :**

- இறைசிந்தனையை விருத்திசெய்தல் (உமாதேவியார்) - அம்மையப்பர்

**கற்றற்பேறுகள் :**

- சிவபெருமானின் சக்தி உமாதேவியார் என்பதை அறிந்து கூறுவார்.
- சிவபெருமானும் உமாதேவியாரும் எம்மீது அன்பும் இரக்கமும் உடையவர்கள் என்பதை உணர்ந்து பக்தியுடன் வழிபடுவார்.

**வளங்கள் :**

- சிவபெருமானும் உமாதேவியாரும் இணைந்த திருவுருவப் படம் (உமாமகேஸ்வரர்)
- கதைப் படங்கள்
  - தாயுமானவர் கதை, சம்பந்தர் ஞானப்பாலுண்ட கதை
- பக்கப்புரட்டி / கணினி

**கற்றல் கற்பித்தல் அணுகுமுறைகள் :**

**செயற்பாடு 1**

- மாணவர்களைப் பாடசாலைச் சூழலில் அமைதியான இடத்திற்கு அழைத்துச்சென்று அரைவட்டமாக அமரச் செய்யுங்கள்.
- சிவனும் உமையும் இணைந்த படங்களைக் காட்சிப்படுத்துங்கள்.
- படங்களை அவதானித்து சிவன், உமை பற்றி மாணவர்கள் சுயமாகக்கூற வழிப்படுத்துங்கள்.
- மாணவர்கள் பின்வருமாறு கூறுகின்றார்களா? என்பதை அவதானியுங்கள்.
  - சிவபெருமான் எமது முழுமுதற் கடவுள்.
  - சிவபெருமானின் சக்தி உமாதேவியார்.
  - உமாதேவியார் உலக மாதா ஆவார்.
  - உயிர்கள் அனைத்திற்கும் தாயும் தந்தையுமாக சிவபெருமானும் உமையம்மையாரும் விளங்குகின்றனர்.
  - அவர்களே உயிர்கள் அனைத்திற்கும் அம்மையும் அப்பருமாக எம்மைக் காத்து அருள்கின்றனர்.
- மேற்கூறப்பட்டவை பற்றி மாணவர்களுக்கு விளக்கமாகக் கூறுங்கள்.

**செயற்பாடு 2**

- எமது தாய், தந்தையர் எம்மீது அன்பு செலுத்திப் பாதுகாப்பது தொடர்பாக மாணவர்களுடன் கலந்துரையாடுங்கள்.
- கதைப் படங்களைப் பக்கப் புரட்டியில் / கணினியில் காட்சிப்படுத்துங்கள்.
- "இறைவன் அம்மை - அப்பர் என்பதைத் தாயுமானவர் - தரம் 1 சைவநெறி
  சம்பந்தர் ஞானப்பாலுண்ட கதை - தரம் 1 சைவநெறி
  ஆகியவற்றை எடுத்துக்கூறி மாணவர்களுக்கு விளக்குங்கள்.
- பாடநூலில் ''அம்மையப்பர்'' பாடத்தினைத் துணையாகக்கொண்டு மெய்ப்பாடு தோன்ற ஆசிரியர் வாசித்துக் காட்டுங்கள்.

- “இறைவனே எமக்குத் தாயும் தந்தையுமாக உள்ளார்” என்பதை மாணவர்கள் தாமறிந்த கதைகள் மூலம் வெளிப்படுத்த ஊக்கப்படுத்துங்கள்.

**செயற்பாடு 3**

- மாணவர்களின் பாதணிகளைக் கழற்றச் செய்யுங்கள்.
- அவர்களை அரைவட்டமாகக் கால்களை ஒன்றுசேர்த்து நெஞ்சில் இரு கைகளையும் கூப்பி நிமிர்ந்து நிற்க அறிவுறுத்துங்கள்.
- “பொன்னார் மேனியனே” என்ற தேவாரத்தினைப் பண்ணுடன் பாடிக் காட்டுங்கள். (பாடநூல் - அம்மையப்பர் பாடத்தைத் துணையாகக் கொள்க.)
- மாணவர்களையும் பண்ணுடன் பாடப் பயிற்றுவியுங்கள்.
- திருமுறைகள் ஓதும் முன்னரும் ஓதிய பின்னரும் “திருச்சிற்றம்பலம்” கூற வேண்டும் என்பதை நினைவிற்கொள்ளுங்கள்.
- மாணவர்கள் குழுவாகவும் தனித்தும் பாடுவதற்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.

**கணிப்பீடு :**

- சிவபெருமானின் சக்தி உமாதேவியார் எனக் கூறுவார்.
- எமக்குத் தாயும் தந்தையுமாக இறைவன் உள்ளார் என்பதைக் கதைகள் மூலம் விளக்கிக் கூறுவார்.
- “பொன்னார் மேனியனே ..” என்ற தேவாரத்தினைப் பக்தியுடன் பாடுவார்.

**நடைமுறை வாழ்வில் பிரயோகித்தல் :**

- இறைவனைத் தாயும் தந்தையுமாகப் போற்றி வணங்குதல்

## தொனிப்பொருள் : 2.0 வாழ்வில் சைவம்

**தேர்ச்சி** : பெற்றோரே எமது கண்கண்ட தெய்வங்கள் என்பதை ஏற்று நடப்பார்.

**உள்ளடக்கம்:**

- பெரியோரைப் போற்றுதல்
  - தாய், தந்தையர்
  - மூத்தவர்கள்

**கற்றற்பேறுகள்:**

- பெரியோரை மதிக்கவேண்டியதன் முக்கியத்துவத்தை உணர்ந்து செயற்படுவார்.
- மூத்தோரின் அறிவுரைகளைக் கேட்டு நடப்பார்.
- சைவப் பிள்ளையாக, பெற்றோரை வணங்கி ஆசி பெறுவார்.

**வளங்கள் :**

- பிள்ளையார் அம்மையப்பரை வணங்கி மாம்பழம் பெற்ற கதையை விளக்கும் படங்கள்
- பிள்ளைகள் பெரியவர்களுக்கு உதவிசெய்யும் காட்சிகள்
- வெற்று அட்டைகள் - ஒட்டுவதற்குத் தேவையான பொருட்கள்

**கற்றல் கற்பித்தல் அணுகுமுறைகள் :**

**செயற்பாடு 1**

- மாணவர்களை வட்டமாக அமரச் செய்யுங்கள்.
- மாணவர்கள் தமது வீட்டில் உள்ள பெரியவர்களுக்குச் (பெற்றோர் / தாத்தா, பாட்டி) செய்கின்ற உதவிகளைக் கூறச் செய்யுங்கள்.
- மாணவர் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு அட்டையை வழங்குங்கள்.
- பெரியவர்களுக்கு உதவி செய்த சந்தர்ப்பங்களைக் கூறவும் எழுதவும் வழிகாட்டுங்கள்.
- மாணவர்கள் எழுதியவற்றைக் கரும்பலகையில் / காட்சிப்பலகையில் ஒட்டுங்கள்.
- மாணவர்கள் காட்சிப்படுத்தியவை பற்றிக் கலந்துரையாடுங்கள்.

**செயற்பாடு 2**

- மாணவர்களை அரைவட்டமாக அமரச் செய்யுங்கள்.
- முன்னைய தரங்களில் கற்ற விடயங்களை நினைவுபடுத்துங்கள்.
  (மாம்பழக்கதை, பெரியோருக்கு உதவுதல்)
- படங்களைக் காட்சிப்படுத்திக் கலந்துரையாடுங்கள்.
- படங்களிலுள்ள காட்சிகள் ஏற்படுத்துகின்ற உணர்வுகளை மாணவர்கள் முன்வைப்பதற்கு வாய்ப்பளியுங்கள்.

**செயற்பாடு 3**

- பெற்றோர், பெரியோரை வணங்கும் முறையைச் செய்துகாட்டுங்கள்.
- மாணவர்கள் ஆசிரியரை / அதிபரை / சமயப் பெரியாரை வீழ்ந்து வணங்கி ஆசி பெற வாய்ப்பளியுங்கள்.
- எச்சந்தர்ப்பத்திலும் பெற்றோர், பெரியோர், மூத்தோர்கள், ஆசிரியர்களுடன் பணிவாகவும் மரியாதையாகவும் பழகுவதுடன் வணக்கம் தெரிவிக்கவும் வணங்கி ஆசி பெறவும் மாணவர்களுக்கு வழிகாட்டுங்கள்.

**செயற்பாடு 4**

- பாடநூலிலுள்ள ''பெரியோரைப் போற்றுவோம்'' பாடத்தை உரத்து வாசியுங்கள்.
- மாணவர்கள் பாடத்தை இரசிப்பதை உறுதிசெய்யுமுகமாக சில வினாக்களை வினவுங்கள்.
- உணவு உண்ணமுன் இறைவனுக்கு நன்றி செலுத்துமுகமாகப் பாடப்படும் ''அன்னம் பாலிக்கும்'' என்ற தேவாரத்தைப் பண்ணுடன் பாடிக் காட்டுங்கள்.
- மாணவர்கள் பாதணிகளை அகற்றிய பின் எழுந்துநின்று ''அன்னம் பாலிக்கும்'' தேவாரத்தைப் பக்தியுடன் பாடுவதற்கு உதவுங்கள்.

**கணிப்பீடு :**

- பெற்றோர், பெரியோருக்கு உதவிய சந்தர்ப்பங்களைக் கூறுவார்.
- பெற்றோர், பெரியோர், மூத்தோரை வணங்கி ஆசி பெறுவார்.
- ''அன்னம் பாலிக்கும்'' என்ற தேவாரத்தை முறைப்படி ஓதுவார்.

**நடைமுறை வாழ்வில் பிரயோகித்தல் :**

- பெற்றோர், பெரியோர், மூத்தோரை மதித்து வணங்கி அவர்களுக்கு எப்போதும் உதவுதல்

## தொனிப் பொருள் : 3.0 சமய நம்பிக்கையும் வழிபாடும்

**தேர்ச்சி** : சமய வழிபாட்டு முறைகளைக் கடைப்பிடிப்பார்.

**உள்ளடக்கம்** :

- வீட்டில் வழிபாடு
  - விளக்கேற்றல்

**கற்றற்பேறுகள்** :

- வீட்டில் காலை, மாலை வழிபாட்டின்போது தாம் செய்பவற்றைக் கூறுவார்.
- காலையும் மாலையும் இறைவனுக்கு விளக்கேற்றி வழிபடுவார்.
- வீட்டில் விளக்கேற்றி வழிபாடு செய்தல் எமது சமயக் கடமையாகும் எனக் கூறுவார்.

**வளங்கள்** :

- பல்வேறு விதமான விளக்குகளின் படங்கள் / மாதிரிகள் (அகல் விளக்கு, குத்துவிளக்கு, கொத்துவிளக்கு, தூண்டாமணி விளக்கு, சர விளக்கு, பாவை விளக்கு)
- விளக்கேற்றும் படங்கள்
- திருவிளக்குப் பூசை செய்யும் படங்கள் / காணொளி

**கற்றல் கற்பித்தல் அணுகுமுறைகள்** :

**செயற்பாடு 1**

- மாணவர்களைச் சிறு சிறு குழுக்களாக்குங்கள்.
- வீட்டிலுள்ள பெரியவர்கள் தினமும் செய்யும் சமயக் கடமைகளைக் குழுவாக முன்வைக்கச் சந்தர்ப்பமளியுங்கள். (வீட்டில் விளக்கேற்றி வழிபாடு செய்தல்)
- விளக்குகளின் படங்களைக் காட்சிப்படுத்துங்கள். (படங்கள் / காணொளி)
- அலங்கார விளக்குகள் பற்றிக் கலந்துரையாடுங்கள்.
- காலையும் மாலையும் வீட்டில் விளக்கேற்றி வழிபாடு செய்வது எமது சமயக் கடமையாகும் என்பதை விளக்கிக் கூறுங்கள்.

**செயற்பாடு 2**

- வகுப்பறைச் சுவாமி மூலையை அவதானிக்கக்கூடியவாறு மாணவர்களை அரைவட்டமாக நிற்கச் செய்யுங்கள். (பாதணிகளைக் கழற்றி)
- வகுப்பறைச் சுவாமி மூலையில் விளக்கேற்றும் செயற்பாட்டினை ஆசிரியர் பாவனை மூலம் செய்து காட்டுங்கள்.
- மாணவர்கள் ஆசிரியரைப் பின்பற்றி விளக்கேற்றும் செயற்பாட்டினைப் பாவனை மூலம் செய்துகாட்ட வழிப்படுத்துங்கள். (தீயுடன் தொடர்புடைய செயற்பாடுகளை வகுப்பறையில் தவிர்த்துக்கொள்ள வேண்டும் என்பதை நினைவிற் கொள்ளவும்)
- பாடத்தினை ஆசிரியர் வாசித்து விளக்கமளியுங்கள்.

**செயற்பாடு 3**

- மாணவர்களைப் பாடசாலையில் அமைந்துள்ள கோயில் / வழிபாட்டிடம் அல்லது பொருத்தமான இடத்திற்கு அழைத்துச் செல்லுங்கள்.
- கால்களை ஒன்றுசேர்த்து நிமிர்ந்து நின்று நெஞ்சில் இரு கைகளையும் கூப்பி நிற்கச் செய்யுங்கள்.

- ஆசிரியர் **"திருச்சிற்றம்பலம்"** கூறி "இல்லக விளக்கது .... " என்ற தேவாரத்தைப் பக்தியுடன் பாடிக் காட்டுங்கள்.
- மாணவர்களைக் குழுவாகவும் தனித்தும் பாடலைப் பக்தியுடன் பாட ஊக்கப்படுத்துங்கள்.

செயற்பாடு 4

- மாணவர்களை "கிரகித்தல்" செயற்பாட்டிற்கு ஏற்றவாறு அமரச் செய்யுங்கள்.
- வீட்டில் விளக்கேற்றி வழிபடுதல் பற்றி மாணவர்களுடன் கலந்துரையாடுங்கள்.
- மாணவர்கள் வீட்டில் வழிபாடு செய்வது பற்றிக் கூறச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- வீட்டில் விளக்கேற்றி வழிபடுவதால் ஏற்படும் நன்மைகள் பற்றி மாணவருக்கு விளக்கிக் கூறுங்கள்.

**காலை, மாலை வீட்டில் வழிபாடு செய்தல்**

- ☐ வீட்டுச் சூழல் தூய்மையடையும்.
- ☐ இறைநம்பிக்கை, இறையருள் வளரும்.
- ☐ வீட்டிலுள்ள அனைவரும் மகிழ்ச்சியுடனும் ஒற்றுமையுடனும் வாழும் நிலை ஏற்படும்.
- ☐ நினைத்த காரியங்கள் இனிதாக நிறைவேறும்.
- ☐ வீடு எப்பொழுதும் மங்கலகரமாக இருக்கும்.
- ☐ வீட்டில் காலையும் மாலையும் விளக்கேற்றி வழிபடுவதால் மஹாலட்சுமியின் திருவருள் கிடைக்கும்; செல்வம் பெருகும்.

**கணிப்பீடு :**

- விளக்குகளின் வகைகளைக் கூறுவார் / பெயர்களை எழுதுவார்.
- விளக்குகளோடு தொடர்புடைய வழிபாடுகள், விழாக்களைக் குறிப்பிடுவார்.
- "இல்லக விளக்கது .." என்ற தேவாரத்தைப் பக்தியுடன் பாடிக்காட்டுவார்.

**நடைமுறை வாழ்வில் பிரயோகித்தல் :**

- வீட்டிலுள்ள பெரியவர்களின் உதவியுடன் காலையும் மாலையும் விளக்கேற்றி வழிபாடு செய்தல்
- தேவாரங்களைப் பக்தியுடன் பாடுதல்

## தொனிப்பொருள் : 3.0 சமய நம்பிக்கையும் வழிபாடும்

**தேர்ச்சி** : சமய வழிபாட்டு முறைகளைக் கடைப்பிடிப்பார்.

**உள்ளடக்கம் :**

- நாளாந்த சமயக் கடமைகள்
  - சிவசின்னங்கள்
    - விபூதி
    - உருத்திராக்கம்

**கற்றற்பேறுகள் :**

- விபூதி, உருத்திராக்கம் என்பன "சிவசின்னங்கள்" என்பதைக் கூறுவார்.
- விபூதியை அணியும் சந்தர்ப்பங்களைக் கூறுவார்.
- விபூதி அணியும் முறையைச் செய்துகாட்டுவார்.
- சிவசின்னங்களைத் தரிக்கும் பழக்கத்தைக் கடைப்பிடிப்பார்.
- விபூதி, உருத்திராக்கம் என்பவற்றின் சிறப்பை (மகிமையை) அறிந்து அவற்றுக்கு மதிப்பளிப்பார்.

**வளங்கள் :**

- விபூதி, உருத்திராக்கம் (தனி மணி / மாலை), செபமாலை
- சிவசின்னங்களின் படங்கள்
- சிவபெருமான், சிவசின்னங்களை அணிந்த நாயன்மார்களின் படங்கள்
- சிவனடியார்களின் படங்கள்

**கற்றல் கற்பித்தல் அணுகுமுறைகள் :**

**செயற்பாடு 1**

- மாணவர்களை அவதானியுங்கள்.
- திருநீறு அணிந்து வருகை தந்துள்ள மாணவர்கள் இருப்பின் அவர்களை முன்னால் அழைத்து விபூதி அணிந்துள்ளமையைப் பாராட்டுங்கள் / அதற்கான ஏற்பாடுகளைச் செய்யுங்கள்.
- விபூதி அணிந்துள்ளமை பற்றி அவர்களுடன் கலந்துரையாடுங்கள் (ஏன்? எதற்கு? எந்தச் சமயத்தவர்?)
- கலந்துரையாடலை ஏனைய மாணவர்கள் அவதானித்துச் செவிமடுக்க வழிப்படுத்துங்கள்.
- சைவ சமயத்தவர் ஒவ்வொருவரும் "விபூதி அணிதல்" சைவ சமய நித்திய கடமைகளில் ஒன்றாகும் என்பதை வலியுறுத்துங்கள். விபூதி அணிவதை வலியுறுத்துங்கள்.
- மாணவர்களைச் சிறு சிறு குழுக்களாக்குங்கள். ஒவ்வொரு குழுவையும் அழைத்து, சுவாமி மூலையில் விபூதி அணியும் முறையைச் செய்துகாட்டுங்கள்.
- அதேபோல் மாணவர்களும் அணியச் சந்தர்ப்பமளியுங்கள்.

**செயற்பாடு 2**

- வகுப்பிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கைக்கேற்பச் சிறு குழுக்களாக்குங்கள்.
- ஒவ்வொரு குழுவிற்கும் சிவபெருமான், சிவசின்னங்கள் அணிந்த நாயன்மார்கள் / சிவனடியார்களின் படங்களை வழங்குங்கள்.
- சிவபெருமானின் திருவுருவப்படத்தை அவதானித்து, அவர் அணிந்துள்ளவை பற்றிக் கூறச் சந்தர்ப்பமளியுங்கள்.
- சிவபெருமான் விபூதி, உருத்திராக்கம் அணிந்துள்ளமை பற்றி மாணவர்கள்

கூறுகின்றனரா? என்பதை அவதானியுங்கள் / கூற வழிப்படுத்துங்கள்.

- விபூதி, உருத்திராக்கம் என்பன சிவசின்னங்களாகும் என்பதை விளக்கிக் கூறுங்கள்.
- இவை சைவர்களாகிய எமக்கு அடையாளமாகும் என்பதைச் சிவனடியார்களின் படங்களின் மூலம் உணரச் செய்யுங்கள்.
  (விபூதி அணிந்து பாடசாலைக்கு வருகைதரும் மாணவர்களைத் தினமும் பாராட்டுவதை வழக்கமாகக் கொள்ளுங்கள்)

**செயற்பாடு 3**

- வகுப்பறையில் சிவபெருமானின் தியானநிலைப் படத்தைக் காட்சிப்படுத்துங்கள். (கையில் செபமாலை உள்ள படம்)
- சிவபெருமான் உருத்திராக்கம் தரித்துள்ளமை பற்றியும் கையிலுள்ள செபமாலை பற்றியும் மாணவருடன் கலந்துரையாடுங்கள்.
- உருத்திராக்க மணி மற்றும் உருத்திராக்க மாலை ஆகியவற்றை மாணவர்களுக்கு வழங்குங்கள். அவை பற்றி அறிந்தவற்றைக் கூறச் சந்தர்ப்பமளியுங்கள்.
- உருத்திராக்கத்தின் மகிமையை எடுத்துக் கூறுங்கள்.
- கிருமிகள் தொற்றாமை, உடற்செயற்பாட்டைச் சீராக்கல், ஆன்மிக உணர்வையும் மன நிம்மதியையும் ஏற்படுத்தல்
- சிவசின்னங்களை அணிவதற்கும் அவற்றுக்கு மதிப்பளிப்பதற்கும் மாணவரை வலியுறுத்துங்கள்.
- பாடநூலிலுள்ள ‘‘சிவசின்னங்கள்’’ பாடத்தை வாசித்துக் காட்டுங்கள்.

**செயற்பாடு 4**

- மாணவர்களை, தேவாரம் பாடுவதற்கான ஆயத்த நிலையில் நிற்கச் செய்யுங்கள்.
- ‘‘பூசுவதும் வெண்ணீறு ...’’ என்ற தேவாரத்தைப் பக்தியுடன் ஆசிரியர் பாடிக் காட்டுங்கள்.
- மாணவர்கள் தனித்தும் குழுவாகவும் பாடச் சந்தர்ப்பமளியுங்கள்.
- திருமுறைகளை ஓதுவதற்கு முன்னரும் பாடிய பின்னரும் “திருச்சிற்றம்பலம்” எனக் கூறுகிறார்களா என்பதை அவதானித்து வலியுறுத்துங்கள்.

**கணிப்பீடு:**

- விபூதியும் உருத்திராக்கமும் சிவசின்னங்கள் எனக் கூறுவார்.
- விபூதியை முறையாக அணிந்து காட்டுவார்.
- விபூதி தரிக்கும் பழக்கத்தைக் கடைப்பிடிப்பார்.
- விபூதிக்கு மதிப்பளித்து, பக்தியுடன் அணிவார்.

**நடைமுறை வாழ்வில் பிரயோகித்தல்:**

- தினமும் விபூதி அணிதல்
- விசேட சமய தினங்கள், விழாக்களின்போது சிவசின்னங்களுக்கு மதிப்பளித்து அவற்றைப் பக்தியுடன் அணிதல்

## தொனிப்பொருள் : 3.0 சமய நம்பிக்கையும் வழிபாடும்

**தேர்ச்சி** : சமய வழிபாட்டு முறைகளைக் கடைப்பிடிப்பார்.

**உள்ளடக்கம் :**
- பண்டிகை
  - தீபாவளி

**கற்றற்பேறுகள் :**
- சைவ சமய விழாக்கள், பண்டிகைகளின்போது வீட்டில் தாம் செய்யும் ஆயத்தங்களைக் கூறுவார்.
- பெற்றோருடன் இணைந்து இறைவழிபாட்டில் ஈடுபடுவார்.
- தீபாவளிப் பண்டிகையைக் கொண்டாடிய முறையினைக் கூறுவார்.
- தீபாவளிப் பண்டிகையுடன் தொடர்பான கதையைக் கூறுவார்.

**வளங்கள் :**
- தீபாவளி வாழ்த்து மடல்கள்
- தீபாவளிக் காட்சிகள் (காணொளிகள் / படங்கள்)
- மாதிரித் தீபாவளித் திருநாள் கொண்டாட்டம்
- வாழ்த்து மடல்கள் தயாரிப்பதற்கான பொருட்கள்

**கற்றல் கற்பித்தல் அணுகுமுறைகள் :**

**செயற்பாடு 1**
- மாணவர்களை வகுப்புக்கு வெளியே அழைத்துச் சென்று அரைவட்டமாக அமரச் செய்யுங்கள்.
- சைவசமயத்தவர்களான நாங்கள் கொண்டாடும் சமயப் பண்டிகைகள் பற்றி மாணவர்களுடன் கலந்துரையாடுங்கள்.
- மாணவர்கள் தீபாவளிப் பண்டிகை பற்றிக் கூறுகின்றனரா? என அவதானியுங்கள்.
- தீபாவளிப் பண்டிகை பற்றி மாணவர்கள் தாம் அறிந்த விடயங்களைச் சுயமாகக் கூறுவதற்குச் சந்தர்ப்பமளியுங்கள்.

**செயற்பாடு 2**
- தீபாவளி வாழ்த்து மடல்களை வகுப்பறையில் காட்சிப்படுத்துங்கள்.
- மாணவர்களை அவர்களின் எண்ணிக்கைக்கேற்பச் சிறுசிறு குழுக்களாக்குங்கள்.
- குழுக்களிடையே வாழ்த்து மடல்களைப் பகிர்ந்தளியுங்கள். (சமய சம்பந்தமான, தீபாவளியுடன் தொடர்புபட்ட படங்களாக அமைதல் வேண்டும்)
- வாழ்த்து மடல்களோடு தொடர்புபட்ட /மாணவர் அறிந்த தீபாவளிப் பண்டிகை பற்றிய கதைகளைக் கூற வழிப்படுத்துங்கள்.
- தீபாவளிப் பண்டிகை தொடர்பான கதையை மாணவர்களுக்கு ஆசிரியர் விளக்கிக் கூறுங்கள். (பாடநூலில் உள்ள “தீபாவளி” என்ற பாடத்தைத் துணையாகக் கொள்ளுங்கள்)
- மாதிரி வாழ்த்துமடல்கள் தயாரிக்க மாணவர்களைப் பயிற்றுவியுங்கள்.

**செயற்பாடு 3**
- மாணவர்கள் தமது வீட்டில் தீபாவளிப் பண்டிகையை எவ்வாறு கொண்டாடுகின்றனர்

என்பதைக் கூறச் சந்தர்ப்பமளியுங்கள்.

- தீபாவளிப் பண்டிகையை எவ்வாறு முறைப்படி கொண்டாட வேண்டும் என்பதை ஆசிரியர் மாணவர்களுக்கு விளக்கமாகக் கூறுங்கள்.
  - தீபாவளிப் பண்டிகைக்காக வீட்டையும் சுற்றுப்புறத்தையும் தூய்மைப்படுத்தல்
  - தீபாவளித் தினத்தன்று அதிகாலையில் எழுந்து நல்லெண்ணெய் தேய்த்து நீராடுதல்
  - புத்தாடை அணிதல்
  - முதலில் சுவாமி அறையில் ஐந்து முக (குத்து) விளக்கு ஏற்றுதல்
  - வீடு மற்றும் முற்றத்தில் ஒழுங்குவரிசையாகத் தீபங்களை ஏற்றி வைத்தல்
  - தீப ஒளியில் இறைவனை வழிபடுதல்
  - உறவினர், நண்பர்களோடு விருந்துண்ணல்
  - தீபாவளி நல்வாழ்த்துக்களை ஒருவருக்கொருவர் தெரிவித்தல் / அன்பைப் பகிர்ந்து கொள்ளல்
- மாணவர்களை இருவர்கொண்ட குழுக்களாக்கி, தீபாவளிப் பண்டிகையை முறையாகக் கொண்டாடும் விதத்தைக் கூறச் செய்யுங்கள். வாழ்த்துக் கூறவும் வழிப்படுத்துங்கள்.
- இடர்ப்படும் மாணவர்களுக்குத் தெளிவாகக் கூற வழிகாட்டுங்கள்.
- தீபாவளிப் பண்டிகையை முறையாகக் கொண்டாடும் விதத்தைத் தமது பெற்றோருக்கும் வீட்டில் உள்ளவர்களுக்கும் கூற அறிவுறுத்துங்கள்.

செயற்பாடு 4

- மாதிரித் தீபாவளிப் பண்டிகை ஒன்றைப் பாடசாலையில் பெற்றோரின் அனுசரணை யுடனும் மாணவர்களின் முழுமையான பங்குபற்றலுடனும் கொண்டாடுங்கள். (ஆடம்பரமற்ற சமய முறைப்படி)

**கணிப்பீடு :**

- தீபாவளிப் பண்டிகையை முறையாகக் கொண்டாடும் விதம் பற்றிக் கூறுவார்.
- தீபாவளி வாழ்த்துமடல்களைத் தாமே தயாரித்து தமது நண்பர்களுக்கு, உறவினர்களுக்கு வழங்குவார்.
- தீபாவளிப் பண்டிகையுடன் தொடர்பான கதைகளைக் கூறுவார்.

**நடைமுறை வாழ்வில் பிரயோகித்தல் :**

- தீபாவளிப் பண்டிகையின்போது வாழ்த்துமடல்களைத் தயாரித்து அனுப்புதல்
- தீபாவளி வாழ்த்துகளை அன்புடன் பகிர்தல்
- தீபாவளிப் பண்டிகையை முறைப்படி கொண்டாடுதல்

## தொனிப்பொருள் : 3.0 சமய நம்பிக்கையும் வழிபாடும்

**தேர்ச்சி** : சமய வழிபாட்டு முறைகளைக் கடைப்பிடிப்பார்.

**உள்ளடக்கம்** :
- ஆலய வழிபாடு
  - ஆலயத்தில் நடந்துகொள்ளும் முறைகள்

**கற்றற்பேறுகள்** :
- ஆலயத்தில் நடந்துகொள்ளும் முறைகளைக் கூறுவார்.
- ஆலயத்தில் வழிபடும் முறைகளைச் செய்துகாட்டுவார்.

**வளங்கள்** :
- ஆலயங்களின் படங்கள்
- பக்தர்கள் ஆலய வழிபாடுகளில் ஈடுபடும் காணொளிகள் (திருவிழா, தீர்த்தோற்சவம்)

**கற்றல் கற்பித்தல் அணுகுமுறைகள்** :

**செயற்பாடு 1**
- ஆலய வழிபாடு (திருவிழா, தீர்த்தோற்சவம்) காணொளிகளை மாணவர்கள் கண்டுகளிப்பதற்கு ஏற்பாடுகளை மேற்கொள்ளுங்கள். (5 - 8 நிமிடங்கள்)
- ஆலய வழிபாடுகளில் ஈடுபடும் பக்தர்களின் செயற்பாடுகள் பற்றி மாணவர்களுடன் கலந்துரையாடுங்கள்.
- ஆலயங்களில் நடந்துகொள்ள வேண்டிய முறைகள் தொடர்பாக மாணவர்கள் சுயமாகக் கூறுவதற்குச் சந்தர்ப்பமளியுங்கள்.
- மாணவர்களின் காணொளி தொடர்பான விருப்பு வெறுப்புகளுக்கு முன்னுரிமை வழங்குங்கள். (ஆலயத்தில் நடந்து கொள்ளவேண்டிய முறைகள்)

**செயற்பாடு 2**
- மாணவர்களைச் சிறுசிறு குழுக்களாக்குங்கள்.
- "ஆலயத்தில் நாம் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும்" எனும் தலைப்பைக் குழுக்களுக்கு வழங்குங்கள்.
- குழு முன்வைப்புகளுக்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- குழு முன்வைப்புகளின்போது இடர்ப்படுவோருக்கு வழிகாட்டல்களை வழங்குங்கள்.
- நிறைவாக, ஆலயத்தில் நடந்துகொள்ளும் முறை பற்றித் தொகுத்துக் கூறுங்கள்.

**செயற்பாடு 3**
- "ஆலயத்தில் நடந்துகொள்ளும் முறைகள்" பற்றிப் பயிற்சிக் கொப்பியில் எழுத மாணவர்களை வழிப்படுத்துங்கள்.
- அது பற்றிய கையேடு ஒன்றைத் தயாரித்து வெளியீடு செய்யுங்கள். (படங்களையும் உள்ளடக்குங்கள்) கையேட்டில் பின்வரும் விடயங்கள் பற்றிக் கவனத்திற் கொள்ளுங்கள்.
  - ☐ **ஆலயம் செல்வதற்கு முன் செய்யவேண்டிய கடமைகள்**
    - தரம் 2 சைவநெறி ஆசிரியர் வழிகாட்டி - ஆலய வழிபாடு, பக்கம் 10 இனைத் துணையாகக் கொள்க.
    - பின்னிணைப்பு - சைவ மாணவர்கள் கடைப்பிடிக்க வேண்டியவை, தரம் 3 இற்கான ஆசிரியர் வழிகாட்டியைப் பார்க்க.

- சைவ சமய கலாசாரத்திற்குப் பொருத்தமானவாறு உடைகளை அணிந்து செல்லல்
- ஆசாரத்துடன் செல்லல்

- **ஆலயத்தில் நடந்துகொள்ளும் முறைகள்**
    - கோபுரத்தை முதலில் வணங்குதல்
    - கை, கால், முகம் கழுவிச் சுத்தம் செய்தல்
    - ஆலய வழிபாட்டு ஒழுங்குமுறையைக் கடைப்பிடித்தல்
    - அமைதியைக் கடைப்பிடித்தல்
    - ஆலயத் தொண்டுகளில் பங்கேற்றல்
    - அடியவர்களுக்கு இடையூறு ஏற்படாதவாறு வழிபாட்டில் ஈடுபடல்
    - பக்தி சிரத்தையுடன் வழிபடுதல்
    - பூசை வழிபாட்டின்போது திருமுறைகளை ஓதுதல்
    - கைத்தொலைபேசிப் பாவனையைத் தவிர்த்தல்

**கணிப்பீடு :**

- ஆலய வழிபாட்டு ஒழுங்குமுறைகளைக் கூறுவார்.
- ஆலயத்தில் நடந்துகொள்ளும் முறைகளை முன்வைப்பார்.
- ஆலயத்தில் நடந்துகொள்ளும் முறைகள் - கையேடு தயாரிப்பதில், வெளியிடுவதில் பங்களிப்பார்.

**நடைமுறை வாழ்வில் பிரயோகித்தல் :**

- ஆலயத்தில் ஒழுங்கைக் கடைப்பிடித்து நடத்தல்

## தொனிப்பொருள் : 3.0 சமய நம்பிக்கையும் வழிபாடும்

**தேர்ச்சி** : சமய வழிபாட்டு முறைகளைக் கடைப்பிடிப்பார்.

**உள்ளடக்கம்** :
- ஆலய வழிபாடு
  - ஆலயத் தொண்டுகள்

**கற்றற்பேறுகள்** :
- ஆலயத்தில் செய்யும் தொண்டுகளைக் கூறுவார்.
- தம்மால் இயன்ற ஆலயத் தொண்டுகளைச் செய்வார்.

**வளங்கள்** :
- ஆலயத் தொண்டுகள் தொடர்பான காட்சிப் படங்கள்
- திருநாவுக்கரசு நாயனாரின் படம் / கதைப் படங்கள்
- பாடசாலைச் சூழலில் அமைந்துள்ள அல்லது அருகாமையிலுள்ள ஆலயம்

**கற்றல் கற்பித்தல் அணுகுமுறைகள்** :

**செயற்பாடு 1**
- வகுப்பறையில் திருநாவுக்கரசு நாயனாரின் திருவுருவப்படத்தைக் காட்சிப்படுத்துங்கள்.
- படத்தை மாணவர்கள் அவதானிக்க வழிப்படுத்துங்கள். நாயனார் பற்றிக் கூற வழிப்படுத்துங்கள்.
- திருநாவுக்கரசு நாயனாரின் கையிலுள்ள **"உழவாரம்"** பற்றி மாணவர்களுக்கு எடுத்துக் கூறுங்கள். (சரியைத் தொண்டு)
- திருநாவுக்கரசு நாயனார் சரியைத் தொண்டு செய்து இறைவனின் முத்திப் பேற்றை அடைந்தவர் என்பதை அறிவுறுத்துங்கள்.

**செயற்பாடு 2**
- மாணவர்களைக் கிரகித்தலுக்குப் பொருத்தமான இடமொன்றிற்கு அழைத்துச் செல்லுங்கள்.
- அரைவட்டமாக அமரச் செய்யுங்கள்.
- ஆலயத் தொண்டுகள் பற்றி விளக்கிக் கூறுங்கள்.
  பாடநூலிலுள்ள "எங்கள் ஆலயம்" என்ற பாடத்தினைத் துணையாகக் கொள்ளுங்கள்.
- ஆலயத்தில் செய்யக்கூடிய தொண்டுகள் தொடர்பாக மாணவர்கள் கூறுவதற்குச் சந்தர்ப்பமளியுங்கள்.
- ஆலயத் தொண்டுகள் என்னும் தலைப்பில் தம்மால் ஆற்றக்கூடிய தொண்டுகளைப் பயிற்சிக் கொப்பியில் எழுதுவதற்கு அறிவுறுத்துங்கள்.

**செயற்பாடு 3**
- மாணவர்களைப் பாடசாலைச் சூழலில் அமைந்துள்ள அல்லது அருகாமையிலுள்ள ஆலயத்திற்கு அனுமதி பெற்று அழைத்துச் செல்லுங்கள்.
- மாணவர்களின் எண்ணிக்கைக்கேற்ப சிறுசிறு குழுக்களாக்குங்கள்.
- ஆலயத் தொண்டிற்கு ஏற்றவாறு பொருத்தமான குழுவைத் தெரிந்து பணிகளில் ஈடுபடுத்துங்கள்.
- பணிகளில் ஈடுபடும் மாணவர்களின் பாதுகாப்பில் கவனஞ் செலுத்துங்கள்.

- ‘ஆலயத்தில் நாம் ஆற்றும் தொண்டுகளும் ஆலய வழிபாடே ஆகும்’ என்பதை மாணவர்களுக்கு விளக்கிக் கூறுங்கள்.
- மாணவர்களுக்கு ஆசியும் வாழ்த்துகளும் கூறி ஆலயத் தொண்டினை நிறைவு செய்யுங்கள். (ஆலய அர்ச்சகர் மூலம் ஆசி வழங்குதல் சிறப்பானதாகும்)

**கணிப்பீடு :**

- ஆலயத் தொண்டுகள் பற்றிக் கூறுவார்.
- ஆலயத் தொண்டுகளை எழுதிக் காட்டுவார்.

**நடைமுறை வாழ்வில் பிரயோகித்தல் :**

- ஆலயத் தொண்டுகள் / பொதுத் தொண்டுகளில் ஈடுபடுதல்

## தொனிப்பொருள் : 3.0 சமய நம்பிக்கையும் வழிபாடும்

**தேர்ச்சி** : சமய வழிபாட்டு முறைகளைக் கடைப்பிடிப்பார்.

**உள்ளடக்கம்** :
- ஆலய வரலாறு
  - திருக்கோணேச்சரம்

**கற்றற்பேறுகள்** :
- திருக்கோணேச்சர ஆலயம் தொடர்பான தகவல்களைக் கூறுவார்.
- திருக்கோணேச்சர ஆலயத்திலுள்ள இறைவன், இறைவி பெயரைக் கூறுவார்.

**வளங்கள்** :
- திருக்கோணேச்சர ஆலயப் படங்கள் / காணொளிகள்

**கற்றல் கற்பித்தல் அணுகுமுறைகள்** :

**செயற்பாடு 1**
- திருக்கோணேச்சர ஆலயத்தின் படங்களை / காணொளிகளைக் கண்டு களிக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- திருக்கோணேச்சர ஆலயத்தின் வரலாறு பற்றி மாணவர்களுக்கு விளக்கமாகக் கூறுங்கள்.
- திருக்கோணேச்சர ஆலயத்தின் படங்கள் / காணொளிகளின் உதவியுடன் ஆலயத்தின் அமைவிடத்தையும் இயற்கை எழிலையும் வரலாற்று ஆதாரங்களையும் அவதானிக்கச் செய்யுங்கள்.
- இவ்வாலயத்திற்குப் பெற்றோருடன் சென்றவர்கள் பற்றிக் கேட்டறிந்து அவர்களது அனுபவங்களை முன்வந்து கூறுவதற்குச் சந்தர்ப்பமளியுங்கள்.
- அத்தோடு திருஞானசம்பந்தர் இத்தலத்தின் மீது பாடிய பதிகம் பற்றியும் நினைவூட்டுங்கள். அதன் பின்னர் மாணவர்களைச் சுயமாகத் திருக்கோணேச்சரம் பற்றிச் சுருக்கமாகக் கூற உற்சாகப்படுத்துங்கள்.

**செயற்பாடு 2**
- மாணவர்களை அரைவட்டமாக அமரச் செய்யுங்கள்.
- திருக்கோணேச்சர இறைவன், இறைவி ஆகியோரின் பெயர்களையும் ஆலயத் தீர்த்தம் பற்றியும் கூறுங்கள்.
- மாணவர்களைச் சோடிகளாக்கி இறைவன், இறைவி பெயர்களையும் ஆலயத் தீர்த்தத்தின் பெயரையும் தமக்கிடையே வினாக்களாக வினவி விடை கூறவும் விடைகளை அப்பியாசக் கொப்பியில் எழுதவும் வழிப்படுத்துங்கள்.

**செயற்பாடு 3**
- பாடநூலிலுள்ள திருக்கோணேச்சரம் பாடத்தை நயத்துடன் வாசித்துக்காட்டுங்கள்.
- திருக்கோணேச்சர ஆலயத்தின் இயற்கைச் சூழலைப் பற்றிச் சுயமாகக் கூறுவதற்கு ஆர்வமூட்டுங்கள்.

**கணிப்பீடு** :
- திருக்கோணேச்சர ஆலயம் தொடர்பான தகவல்கள் சிலவற்றைக் கூறுவார்.
- திருக்கோணேச்சர ஆலயத்துடன் தொடர்புடைய வினாக்களுக்கு விடையளிப்பார்.

**நடைமுறை வாழ்வில் பிரயோகித்தல்:-**

- ஆலயங்களுக்குச் சென்று மன அமைதியைப் பெற்று வாழ்வை வளம்பெறச் செய்தல்

## தொனிப்பொருள் : 3.0 சமய நம்பிக்கையும் வழிபாடும்

**தேர்ச்சி** : சமய வழிபாட்டு முறைகளைக் கடைப்பிடிப்பார்.

**உள்ளடக்கம்** :
- பாடசாலையில் சமய வழிபாடு
  - தினசரி காலைப் பிரார்த்தனை

**கற்றற்பேறுகள்** :
- பாடசாலையில் தினசரி காலைப் பிரார்த்தனையில் கலந்து கொள்வார்.
- காலைப் பிரார்த்தனையின்போது திருமுறைகளை ஓதுவார்.

**வளங்கள்** :
- பாடசாலைச் சமய நிகழ்வுகள், விழாக்களின் காட்சிப் படங்கள், காணொளிகள் திருமுறைப் பாடல்கள் கொண்ட இறுவட்டு / கணினி

**கற்றல் கற்பித்தல் அணுகுமுறைகள்** :

**செயற்பாடு 1**
- "பாடசாலையில் சமயம்" எனும் தலைப்பில் கண்காட்சி ஒன்றை ஏற்பாடு செய்யுங்கள்.
- பாடசாலைச் சமய நிகழ்வுகள், விழாக்களின் படங்களைக் காட்சிப்படுத்துங்கள்.
- வசதியிருப்பின் காணொளிச் செயற்பாட்டினையும் மேற்கொள்ளுங்கள்.
- கண்காட்சியில் அனைத்து மாணவர்களும் கலந்துகொண்டு காட்சிப்படுத்தப்பட்ட படங்களுடன் தொடர்புபட்ட பாடசாலைச் சமய நிகழ்வுகள், விழாக்கள் பற்றிக் கூற மாணவர்களுக்குச் சந்தர்ப்பமளியுங்கள்.
- சரியாக / பொருத்தமாகக் கூறும் மாணவர்களைப் பாராட்டுங்கள்.

**செயற்பாடு 2**
- மாணவர்களைச் சிறுசிறு குழுக்களாக்குங்கள்.
- பாடசாலையில் நடைபெறும் சமய நிகழ்வுகள், விழாக்கள் பற்றிய பட்டியலொன்றைத் தயாரிக்கக் குழுக்களை அறிவுறுத்துங்கள்.
- குழு ரீதியான முன்வைப்புகளுக்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஆசிரியர், குழுக்களின் முன்வைப்புகளைத் தொகுத்து ஒழுங்குபடுத்திக் கூறுங்கள்.

**செயற்பாடு 3**
- மாணவர்களை அரைவட்டமாக அமரச் செய்யுங்கள்.
- பாடசாலைக் காலைப் பிரார்த்தனை தொடர்பாக மாணவர்களுக்கு விளக்கிக் கூறுங்கள்.
- காலைப் பிரார்த்தனையின்போது மாணவர்கள் கடைப்பிடிக்கவேண்டியவை பற்றி விளக்கிக் கூறுங்கள்.
- காலைப் பிரார்த்தனையின்போது திருமுறை ஓதுதல் பற்றி மாணவர்களுடன் கலந்துரையாடுங்கள்.
- திருமுறை ஓதுவதற்கான கொண்ணிலையில் மாணவர்களை ஆயத்தம் செய்யுங்கள்.
- "திருச்சிற்றம்பலம்" எனக் கூறி ஆசிரியர் மாணவர்களுக்கு திருமுறைகளைப் பண்ணோடு ஓதிக் காட்டுங்கள்.

பாடநூல் - பாடசாலையில் சமயம் (காதலாகிக் கசிந்து....., வேதநெறி தழைத்தோங்க..... என்பவற்றைத் துணையாகக் கொள்ளவும்)

- ஆசிரியர் பாடியவாறு மாணவர்களையும் பாட வழிப்படுத்துங்கள்.
- மாணவர் குழுவாகவும் தனித்தும் பாடச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.

**கணிப்பீடு :**

- காலைக் கூட்டத்தில் தவறாது பங்குகொள்வார்.
- காலைப் பிரார்த்தனையின்போது திருமுறைகளை ஓதுவார்.
- காலைப் பிரார்த்தனையின்போது மாணவர்கள் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுங்குமுறை பற்றிக் கூறுவார்.

**நடைமுறை வாழ்வில் பயன்படுத்தல் :**

- காலைப் பிரார்த்தனையின்போது ஒழுங்குமுறையைக் கடைப்பிடித்தல்
- சமய நிகழ்வுகளின்போது திருமுறைகளை ஓதுதல்

## தொனிப்பொருள் : 3.0 சமய நம்பிக்கையும் வழிபாடும்

**தேர்ச்சி** : சமய வழிபாட்டு முறைகளைக் கடைப்பிடிப்பார்.

**உள்ளடக்கம்** :
- பாடசாலையில் சமய வழிபாடு
  - பூமரங்களை வளர்ப்போம்

**கற்றற் பேறுகள்** :
- பூசைக்குரிய பூமரங்களை நாட்டிப் பராமரிப்பார்.
- பூசைக்குரிய பூக்கள், பச்சிலைகள் பற்றி அறிந்து கூறுவார்.

**வளங்கள்** :
- பாடசாலைப் பூந்தோட்டம், பூமரங்கள் தொடர்பான காட்சிப் படங்கள் / காணொளிகள்
- பாடசாலைச் சூழலில் அமைந்துள்ள கோயில்
- பூக்கள், பூமாலைகள் சாத்தப்பட்டுள்ள சுவாமிப்படங்கள்
- காணொளிகள் - அர்ச்சனை, அலங்காரம்

**கற்றல் கற்பித்தல் அணுகுமுறைகள்** :

**செயற்பாடு 1**
- மாணவர்களைப் பாடசாலைச் சூழலில் அமைந்துள்ள கோயில், பூந்தோட்டம் ஆகியவற்றை அவதானிப்பதற்காக அழைத்துச் செல்லுங்கள்.
- மாணவர்கள் பூமரங்கள், செடிகளை அவதானித்தபோது ஏற்பட்ட மன மகிழ்ச்சியையும் உணர்வையும் சுயமாகக் கூறுவதற்குச் சந்தர்ப்பமளியுங்கள்.
- சமய வழிபாடுகளின்போது பூக்கள் பயன்படும் விதம், அதனால் பக்தி உணர்வு, மன நிறைவு என்பன எமக்கு ஏற்படுகின்றன என்பதை மாணவர்களுக்கு விளக்கமாகக் கூறுங்கள்.

**செயற்பாடு 2**
- மாணவர்களைப் பாடசாலைச் சூழலில் பொருத்தமான இடத்திற்கு அழைத்துச் சென்று அமரச் செய்யுங்கள்.
- பூந்தோட்டம், பூமரங்கள், பூக்கள் தொடர்பான காட்சிப் படங்கள், காணொளிகளை அவதானிக்கச் செய்யுங்கள்.
- பூசைக்குரிய பூக்கள், பச்சிலைகள் பற்றி மாணவர்களுடன் கலந்துரையாடுங்கள்.
- பாடசாலையில் / பூந்தோட்டத்தில் ஒவ்வொரு மாணவரும் பூமரங்களை நாட்டிப் பராமரிக்க வழிப்படுத்துங்கள்.

**செயற்பாடு 3**
- மாணவர்களைச் சிறுசிறு குழுக்களாக்குங்கள்.
- பாடசாலைச் சூழலில் நாட்டிப் பராமரிக்க வேண்டிய பூமரங்களினதும் பச்சிலைத் தாவரங்களினதும் பயன்களடங்கிய பட்டியல் ஒன்றைத் தயாரித்துக் காட்சிப்படுத்துமாறு குழுக்களுக்கு அறிவுறுத்துங்கள்.
- குழுக்களின் முன்வைப்புகளைக் காட்சிப்படுத்துங்கள்.
- ஆசிரியர், அவற்றைத் தொகுத்து மாணவர்களுக்கு விளக்கமாக எடுத்துக்கூறுங்கள்.
- பயிற்சிக் கொப்பியில் எழுத அறிவுறுத்துங்கள்.
- பின்னிணைப்பினைத் துணையாகக் கொள்க.

**கணிப்பீடு** :
- பூமரங்களை நாட்டிப் பராமரிப்பார்.
- பூசைக்குரிய பூக்கள், பச்சிலைகள் பற்றிக் கூறுவார்.

**நடைமுறை வாழ்வில் பிரயோகித்தல்** :
- பூமரங்களை நாட்டிச் சமய வழிபாட்டிற்குப் பயன்படுத்துதல் / வழங்குதல்

**பின்னிணைப்பு :**

**பாடசாலைச் சூழலில் நாட்டிப் பராமரிக்கவேண்டிய பூமரம், செடி கொடிகளும் அவற்றின் பயன்களும்**

| **பூமரம், செடி கொடி** | **பூசைக்குப் பயன்படுத்தல்** | **பயன்கள்** |
|---|---|---|
| துளசி | துளசிதளம் (தளிர் இலைகள்)<br>துளசிமாலை | - துளசி மாலை<br>- துளசித் தீர்த்தமாக அருந்துதல்<br>- மூலிகைத் தாவரம்<br>- அதிகளவு ஒட்சிசனை வெளிவிடுவதால் வீட்டு முற்றத்தில் வளர்த்தல் |
| மல்லிகை | பூ, இலைகள் | - சூழலை அழகுபடுத்தல்<br>- சுவாமிக்குப் பூ சாத்துதல்<br>- பூமாலை கட்டுதல்<br>- அர்ச்சனைக்குப் பயன்படுத்தல் |
| அறுகம்புல் | அறுகு (தளிர்)<br>அறுகம்புல் மாலை | விநாயகப் பெருமானுக்குச் சாத்தி வழிபடல்<br>மாலை கட்டுதல்<br>அறுகம்புல் சாறு, இரசம், உணவாகப் பயன்படுத்தல்<br>உடல் உஷ்ணத்தைத் தணித்தல் |
| தர்ப்பை (புல்) | கூர்ச்சம் (கும்பம்)<br>பவித்திரம்<br>(விரலில் அணிதல்) | மனத் திடத்தைத் தரும்<br>நச்சுக்கதிர் வீச்சினைத் தடுக்கும்<br>தர்ப்பைப்பாயாகவும் பயன்படும்.<br>உடல் சக்தியிழப்பைத் தடுக்கும். |

- தங்களது புவியியற் தன்மை, சூழலுக்கு ஏற்றவாறு மேற்குறிப்பிட்டவாறான அட்டவணையை விரிவுபடுத்தித் தயாரித்து ஆசிரியர், மாணவர்களுக்கு வழங்குங்கள்.

## தொனிப்பொருள் : 3.0 சமய நம்பிக்கையும் வழிபாடும்

**தேர்ச்சி** : சமய வழிபாட்டு முறைகளைக் கடைப்பிடிப்பார்.

**உள்ளடக்கம்** :
- பாடசாலையில் சமய வழிபாடு
  - நவராத்திரி (ஏடு தொடக்கல்)

**கற்றற் பேறுகள்** :
- ஏடு தொடக்கல் என்பதன் விளக்கத்தைக் கூறுவார்.
- ஏடு தொடக்கல் நிகழ்வில் பார்த்தவற்றை / அனுபவத்தை விபரித்துக் கூறுவார்.

**வளங்கள்** :
- ஏட்டுச் சுவடிகள் (பனையோலை)/ ஏடுகள்
- ஏடு தொடக்கல் நிகழ்வுப் படங்கள்
- காணொளிகள்

**கற்றல் கற்பித்தல் அணுகுமுறைகள்** :

**செயற்பாடு 1**
- மாணவர்களைப் பொருத்தமான இடத்திற்கு அழைத்துச் சென்று அரைவட்டமாக அமரச் செய்யுங்கள்.
- ஏடு தொடக்கல் நிகழ்வுப் படங்கள் / காணொளிகளைக் காட்சிப்படுத்துங்கள்.
- பாடசாலை நவராத்திரி விழா பற்றி மாணவர்கள் தாம் பார்த்தவற்றை அல்லது தமது அனுபவத்தைக் கூறுவதற்குச் சந்தர்ப்பமளியுங்கள்.
- முற்காலத்தில் பனை ஓலையினாலான ஏட்டில் எழுதியே எமது முன்னோர்கள் கல்வியைக் கற்றனர் என்பதை எடுத்துக் கூறுங்கள்.
- அதனாலேயே "ஏடு தொடக்கல்" எனக் கூறப்படுகின்றதென்பதையும் மாணவர்களுக்கு உணர்த்துங்கள்.

**செயற்பாடு 2**
- ஏடு தொடக்கல் நிகழ்வு பற்றி மாணவர்களுக்கு விளக்கிக் கூறுங்கள்.
- ஏடு தொடக்கல் என்றால் என்ன? ஏடு தொடக்கல் நிகழ்வு எப்போது நடைபெறும்? பிள்ளைகளுக்கு எத்தனை வயதில் ஏடு தொடக்குவார்கள்? போன்ற ஏடு தொடக்கல் நிகழ்வு பற்றிய வினாக்களை மாணவர்களிடம் வினவுங்கள்.
- ஏடு தொடக்கல் நிகழ்வு பற்றிக் கீழ்வருமாறு தொகுத்து மாணவர்களுக்கு முன்வையுங்கள்.

- ☐ ஏடு தொடக்கல் - கல்வியைத் தொடங்குதல் என்பது இதன் பொருளாகும்.
- ☐ ஏடு தொடக்கல் - வித்தியாரம்பம், அட்சர அப்பியாச ஆரம்பம் எனவும் பெயர் பெறும்.
- ☐ குழந்தைகளுக்கு - மூன்று அல்லது ஐந்து வயதில் ஏடு தொடக்கலாம்.
- ☐ நவராத்திரியின் அடுத்த நாளான விஜயதசமியன்று பாடசாலைகளிலும் கோயில்களிலும் ஏடு தொடக்கல் நிகழ்வு நடைபெறும்.
- ☐ குருவானவர் குழந்தையை மடியில் இருத்தி, ஏட்டைப் பிள்ளையின் கையிற் கொடுத்து அகர முதலான எழுத்துக்களைச் சொல்லிக்கொடுப்பார்.
- ☐ பின்னர், தட்டத்தில் பச்சை அரிசியைப் பரப்பி அதில் பிள்ளையின் விரலைப் பிடித்து எழுதுவார்.
- ☐ கல்வியில் மேன்மையடைய வேண்டும் என்பதற்காக சுபநாளில் ஏடு தொடக்குவது எமது சமய மரபாகக் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது.

**கணிப்பீடு** :
- ஏடு தொடக்கல் என்பதன் விளக்கத்தைத் தமது மொழிநடையில் சுருக்கமாகக் கூறுவார்.
- ஏடு தொடக்கல் நிகழ்வை ஒழுங்குமுறையாக விபரித்துக் கூறுவார்.

**நடைமுறை வாழ்வில் பிரயோகித்தல்** :
- வித்தியாரம்பத்தைச் சுப நாளில் தொடங்குதல்

## தொனிப்பொருள் : 4.0 தோத்திரப் பாடல்களும் அறநெறிப் பாடல்களும்

**தேர்ச்சி** : தோத்திரப் பாடல்களைப் பாடுவார்.

**உள்ளடக்கம் :**

- தேவாரம்
  - காதலாகிக் கசிந்து ...
  - இல்லக விளக்கது ...
  - அன்னம் பாலிக்கும் ...
  - பொன்னார் மேனியனே ...
- திருவாசகம்
  - பூசுவதும் வெண்ணீறு ...
- பெரியபுராணம்
  - வேதநெறி தழைத்தோங்க ...

**கற்றற்பேறுகள் :**

- திருமுறைகளில் தேவாரம், திருவாசகம், பெரிய புராணம் என்பனவும் அடங்கும் எனக் கூறுவார்.
- திருமுறைகளைப் பாட முன்பும், பாடிய பின்பும் ''திருச்சிற்றம்பலம்'' கூறுவார்.
- கடவுளை வழிபடும்போது திருமுறைகளைப் பக்தியுடன் பாடுவார்.
- தரப்பட்ட தேவாரம், திருவாசகம், பெரியபுராணம் என்பவற்றைப் பாடியருளியவர்களின் பெயர்களை அறிந்து கூறுவார்.
- தேவாரம் பாடிய நாயன்மார்களை (படங்களை) இனங்கண்டு கூறுவார்.

**வளங்கள் :**

- நாயன்மார்களின் படங்கள், பெயர் அட்டைகள்
- திருமுறைப் பாடல்கள் அடங்கிய இறுவட்டுக்கள் (இணையத்தளம்)
- தோத்திரப்பாடல் அட்டைகள்

**கற்றல் கற்பித்தல் அணுகுமுறைகள் :**

செயற்பாடு 1

- மாணவர்களை நிரை நிரையாக 3 நிரலில் அமரச் செய்யுங்கள்.
- திருமுறைகளில் தேவாரம், திருவாசகம், பெரியபுராணம் என்பனவும் அடங்கும் எனவும் முதலில் தேவாரமும் இறுதியில் பெரிய புராணமும் பாடப்பட வேண்டும் எனவும் கூறுங்கள்.
- திருமுறைகளை ஓத முன்னும் ஓதிய பின்னும் ''திருச்சிற்றம்பலம்'' கூற வேண்டும் என்பதை நினைவுபடுத்துங்கள்; அதற்கான காரணத்தையும் விளக்குங்கள்.
- தேவாரம், திருவாசகம், பெரியபுராணம் ஆகியவற்றைப் பண்ணோடு ஓதிக் காட்டுங்கள்.
- மாணவர்களும் பண்ணோடு ஓதிப் பழக உற்சாகப்படுத்துங்கள்.

செயற்பாடு 2

- மாணவர்கள் தேவாரம், திருவாசகம், பெரியபுராணம் ஆகியவற்றை ஓதும்போது கைகூப்பிப் பக்தியுடன் ஓத வழிப்படுத்துங்கள்.
- பாடநூலிலுள்ள தேவாரங்கள், திருவாசகம், பெரியபுராணம் ஆகிய பாடல் வரிகளின் கருத்தைக் கூறுங்கள். (அதாவது அந்தப் பாடல் உருவாக ஏதுவான கதையை / சந்தர்ப்பத்தைக் கூறுங்கள்)
- தரப்பட்ட தேவாரங்கள், திருவாசகம், பெரியபுராணம் ஆகியவற்றைப் பாடியருளிய வர்களின் பெயர்களையும் காட்சிப்படுத்திக் கலந்துரையாடுங்கள்.

**கணிப்பீடு :**

- தோத்திரப் பாடல்களைப் பக்தியுடனும் பண்ணுடனும் முறைப்படி பாடுவார்.
- தோத்திரப் பாடல்களைப் பாடியருளியவர்களின் பெயர்களைக் கூறுவார்.

**நடைமுறை வாழ்வில் பிரயோகித்தல்:**

- காலையிலும் மாலையிலும் கடவுளை வணங்கும்போது ''திருச்சிற்றம்பலம்'' கூறித் திருமுறைகளை ஓதுதல்

## தொனிப்பொருள் : 4.0 தோத்திரப் பாடல்களும் அறநெறிப் பாடல்களும்

**தேர்ச்சி** : அறநெறி உணர்த்தும் பாடல்களைப் பாடுவார்.

**உள்ளடக்கம் :**

- அறநெறிப் பாடல்கள்
  - உலக நீதி (தெரிவுசெய்யப்பட்ட பாடல் அடிகள்)

**கற்றற் பேறுகள் :**

- பாடநூலில் தரப்பட்டுள்ள உலக நீதிப் பாடல் அடிகளை ஓதுவார்.
- உலக நீதிப் பாடல் அடிகளின் பொருளை விளங்கிக்கொள்வார்.

**வளங்கள் :**

- நீதிநூல்கள்
- உலக நீதிப் பாடல் அடிகள் எழுதப்பட்ட அட்டைகள்

**கற்றல் கற்பித்தல் அணுகுமுறைகள் :**

**செயற்பாடு 1**

- நீதிநூல்களான ஆத்திசூடி, கொன்றைவேந்தன், நல்வழி போன்ற நூல்களைக் காட்சிப்படுத்துங்கள் (ஆசிரியர்களின் பெயர்களுடன்).
- நீதிநூல்கள் என்றால் என்னவென்பது பற்றிக் கலந்துரையாடுங்கள்.
- உலகநீதிப் பாடல்களைப் பாடிக்காட்டுங்கள்.
- மாணவர்களும் ஆசிரியரைப் பின்பற்றிப் பாட வழிப்படுத்துங்கள்.

**செயற்பாடு 2**

- மாணவரை அரைவட்டமாக அமரச்செய்யுங்கள்.
- கரும்பலகையில் கீழேயுள்ள சொற்களை எழுதுங்கள்.

  உதாரணம் : ஓதுதல், மாதா, பொல்லாங்கு, வஞ்சனை, புறம்சொல்லல், பொய், மாற்றான், சினம், மனம், அல்லல், சினந்திருந்தார், செய்ந்நன்றி.
- மேற்படி சொற்கள் பற்றி மாணவர்கள் புரிந்துவைத்துள்ள கருத்தைக் கலந்துரையாடல் மூலம் வெளிக்கொண்டுவாருங்கள்.

  உதாரணம்: ஓதுதல் - படித்தல்<br>ஒவ்வொரு நாளும் படிக்க வேண்டும்,<br>ஆகவே ஓதாமல் ஒருநாளும் இருக்கக்கூடாது.
- இவ்வாறு ஒவ்வொரு சொல்லாகக் கலந்துரையாடுங்கள்.
- உலகநீதி தெரிவுசெய்யப்பட்ட பாடல் அடிகளை உரத்து வாசியுங்கள்.
- அடிகளின் பொருளை இலகுநடையில் விளக்குங்கள்.

**செயற்பாடு 3**

- மாணவர்களைச் சிறு சிறு குழுக்களாக்குங்கள். (4 அல்லது 5 பேர் கொண்ட குழுக்கள்)
- உலகநீதி எழுதப்பட்ட அட்டைகளை ஒவ்வொரு குழுவுக்கும் வழங்குங்கள்.
- குழுவிலுள்ள ஒரு பிள்ளை வாசிக்கும்போது ஏனையவர் அவதானத்துடன் செவிமடுக்க வழிப்படுத்துங்கள்.
- குழுவிலுள்ள ஒவ்வொரு பிள்ளையும் தாம் செவிமடுத்த பாடல் அடிகளைக் கூறச் சந்தர்ப்பமளியுங்கள்.

**செயற்பாடு 4**

- மாணவர் ஒவ்வொருவராக முன்வந்து ஒவ்வொரு பாடல் அடியைக் கூறிப் பொருளையும் கூறுவதற்குச் சந்தர்ப்பமளியுங்கள்.
- இடர்ப்படும் மாணவர்களுக்கு உதவி வழங்குங்கள்.

**கணிப்பீடு :**

- உலக நீதிப் பாடலடிகளை ஓதுவார்.
- உலகநீதியின் குறித்த அடிகளுக்கான பொருளைக் கூறுவார்.

**நடைமுறை வாழ்வில் பிரயோகித்தல் :**

- உலக நீதியின்படி ஒழுகுதல்

**பின்னிணைப்பு :**

## உலக நீதி

1. ஓதாமல் ஒருநாளும் இருக்கவேண்டாம்.
   ஒருவரையும் பொல்லாங்கு சொல்லவேண்டாம்.

2. மாதாவை ஒருநாளும் மறக்கவேண்டாம்.
   வஞ்சனைகள் செய்வாரோ டிணங்கவேண்டாம்.

3. போகாத இடந்தனிலே போகவேண்டாம்.
   போகவிட்டுப் புறஞ்சொல்லித் திரியவேண்டாம்.

4. நெஞ்சாரப் பொய்தன்னைச் சொல்லவேண்டாம்.
   நிலையில்லாக் காரியத்தை நிறுத்தவேண்டாம்.

5. அஞ்சாமல் தனிவழியே போகவேண்டாம்.
   அடுத்தவரை ஒருநாளும் கெடுக்கவேண்டாம்.

6. மனம்போன போக்கெல்லாம் போகவேண்டாம்.
   மாற்றானை உறவென்று நம்பவேண்டாம்.

7. சினந்தேடி அல்லலையும் தேடவேண்டாம்.
   சினந்திருந்தார் வாசல்வழிச் சேரல்வேண்டாம்.

8. சேராத இடந்தனிலே சேர வேண்டாம்.
   செய்த நன்றி ஒரு நாளும் மறக்க வேண்டாம்.

## தொனிப்பொருள் : 5.0 சமயக் கதைகள்

**தேர்ச்சி** : சமயக் கதைகள் ஊடாக சமய உணர்வு, நம்பிக்கை என்பவற்றை விருத்தி செய்வார்.

**உள்ளடக்கம் :**

- இறை நம்பிக்கையை ஊட்டும் சமயக் கதைகள்
  - விநாயகர் பெருமை (பொள்ளாப் பிள்ளையார்)

**கற்றற்பேறுகள் :**

- கதைகளை இறை நம்பிக்கையுடனும் இரசனையுடனும் கூறுவார்.
- கதைகளைப் பாத்திரமேற்று நடித்துக் காட்டுவார்.
- இறைவனின் கருணையை உணர்ந்து பக்தியுடன் வணங்குவார்.

**வளங்கள் :**

- பிள்ளையாரின் திருவுருவப் படம்
- பாடநூலிலுள்ள ''பொள்ளாப் பிள்ளையார்'' கதைப் படங்கள்

**கற்றல் கற்பித்தல் அணுகுமுறைகள் :**

**செயற்பாடு 1**

- பிள்ளையாரின் திருவுருவப் படத்தைக் காட்சிப்படுத்துங்கள்.
- மாணவர்களை " **ப** " வடிவில் நிறகச் செய்யுங்கள்.
- பிள்ளை ஒருவரைப் பிள்ளையார்போல் பாவனை செய்தவாறு நடுவில் நிற்குமாறு கூறுங்கள்.
- பிள்ளையாரை வணங்கும் முறையை நினைவுபடுத்துங்கள்.
- தலையிற் குட்டித் தோப்புக்கரணம் போட்டு வழிபடுதல்
  (முறைப்படி செய்கிறார்களா என்பதை அவதானித்து வழிப்படுத்துங்கள்.)

**செயற்பாடு 2**

- மாணவர்களை அரைவட்டமாக அமரச் செய்யுங்கள்.
- பிள்ளையார் பற்றி ஏற்கனவே அறிந்திருப்பவற்றை முன்வந்து கூறச்செய்யுங்கள்.
- பிள்ளையாரின் அற்புதங்கள், திருவிளையாடல்கள் பற்றிக் கலந்துரையாடுங்கள்.
- மாணவர்கள் கூறியவற்றைத் தொகுத்துக் கரும்பலகையில் எழுதுங்கள்.
  உதாரணம் : விக்கினங்கள் தீர்ப்பவர்.
  வினைகள் அறுப்பவர்.
  ஞானம் தருபவர்.

**செயற்பாடு 3**

- மாணவர் ஒருவர் பிள்ளையார் போன்று வீற்றிருக்க, ஆசிரியர் நம்பியைப்போல் பாவனைசெய்து காட்டுங்கள்.
- ''பொள்ளாப் பிள்ளையார்'' பாடத்தின் கதைச் சுருக்கத்தை இரசனையுடன் கூறுங்கள்.
- பாடநூலிலுள்ள ''பொள்ளாப் பிள்ளையார்'' கதையை உரத்து வாசியுங்கள்.
- மாணவர்கள் அவதானித்துச் செவிமடுப்பதை வினாக்கேட்டு உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.

**செயற்பாடு 4**

- மாணவர்களைச் சோடிகளாக்கி ஒருவர் நம்பியாகவும் மற்றையவர் பிள்ளையாராகவும் பாவனைசெய்து நடித்துக்காட்ட வழிப்படுத்துங்கள்.
- மாணவர் பொள்ளாப் பிள்ளையாரின் கதைச் சுருக்கத்தை முன்வந்து கூறுவதற்குச் சந்தர்ப்பமளியுங்கள்.

**கணிப்பீடு :**

- பிள்ளையாரின் பெருமைகளைக் கூறுவார்.
- "பொள்ளாப் பிள்ளையாரின் கதையைச்" சுருக்கமாகக் கூறுவார்.
- கதையைப் பாத்திரமேற்று நடித்துக் காட்டுவார்.

**நடைமுறை வாழ்வில் பிரயோகித்தல்**

- இறைவனை முழு நம்பிக்கையோடும் அன்போடும் வழிபடுதல்

## தொனிப்பொருள் : 5.0 சமயக் கதைகள்

**தேர்ச்சி** : சமயக் கதைகள் ஊடாக சமய உணர்வு, நம்பிக்கை என்பவற்றை விருத்தி செய்வார்.

**உள்ளடக்கம்** :

- இறை நம்பிக்கையை ஊட்டும் சமயக் கதைகள்
  - முருகப்பெருமான் (சூரசங்காரம்)

**கற்றற்பேறுகள்** :

- சமயக் கதைகளை இறை நம்பிக்கையுடனும் இரசனையுடனும் கூறுவார்.
- கதைகளைப் பாத்திரமேற்று நடித்துக் காட்டுவார்.
- இறைவனின் கருணையை உணர்ந்து பக்தியுடன் வணங்குவார்.

**வளங்கள்** :

- முருகப்பெருமானின் திருவுருவப் படங்கள் / முருகப்பெருமான் தோன்றிய கதைப் படங்கள்
- சூரன் போர் - நிகழ்வுக் காணொளிகள் / படங்கள்
- இறுவட்டு, கணினி

**கற்றல் கற்பித்தல் அணுகுமுறைகள்** :

**செயற்பாடு 1**

- மாணவர்கள், காட்சிப் படங்கள் / காணொளிகளைப் கண்டு களிப்பதற்குப் பொருத்தமான ஓர் இடத்தை ஏற்பாடு செய்யுங்கள்.
- முருகப்பெருமானின் திருவுருவப் படங்கள் / சூரன் போர் / சூரசங்காரப் படங்கள் / காணொளிகளை அவதானிக்க வழிப்படுத்துங்கள்.
- அவை தொடர்பாக மாணவருடன் கலந்துரையாடுங்கள்.
- தமது பிரதேசத்தில் நடைபெற்ற / தாம் கண்டுகளித்த "சூரசங்காரம்" நிகழ்வு பற்றி மாணவர்கள் சுயமாகத் தமது அனுபவங்களைக் கூறச் சந்தர்ப்பமளியுங்கள்.

**செயற்பாடு 2**

- முருகப்பெருமானின் திருவுருவப் படங்களைக் காட்சிப்படுத்துங்கள்.
- படத்தினை அவதானித்து "முருகப்பெருமானின் தோற்றம்" பற்றிக் கலந்துரையாடுங்கள்.
- "சூரசங்காரம்" கதையை மாணவருக்கு விளக்கமாகக் கூறுங்கள்.
  (பாடநூலிலுள்ள "சூரசங்காரம்" பாடத்தினைத் துணையாகக் கொள்க)
- பாடத்தினைத் தெளிவாக வாசித்துக் காட்டுங்கள்.
- மாணவர்கள், செவிமடுத்துக் கிரகித்துக் கதையைக் கூறச் சந்தர்ப்பமளியுங்கள்.

**செயற்பாடு 3**

- "சூரசங்காரம்" பாடத்தினைத் துணையாகக் கொண்டு இறைவன் உயிர்களிடத்தில் கொண்டுள்ள கருணையை மாணவர்களுக்குக் கீழ்வருமாறு விளக்கிக் கூறுங்கள்.
  - ☐ சூரபத்மன் ஓர் அசுரன்.
  - ☐ சிவபெருமானை நோக்கித் தவம்செய்து அரிய வரங்களைப் பெற்றான்.
  - ☐ அதனால் கர்வம் அடைந்தான்.
  - ☐ முனிவர்களையும் தேவர்களையும் வருத்தினான்.
  - ☐ சிவபெருமான் முனிவர்களையும் தேவர்களையும் காக்கத் திருவுளங்கொண்டார்.

- ☐ முருகப்பெருமானைத் தமது நெற்றிக் கண்ணிலிருந்து தோற்றுவித்தார்.
- ☐ முருகப்பெருமான் சூரனுடன் போர் புரிந்தார்.
- ☐ சூரனின் கர்வத்தை அடக்கினார்.
- ☐ சூரன் தனது தவறை உணர்ந்தான்.
- ☐ முருகப்பெருமானைப் பணிந்து வருந்தினான்.
- ☐ முருகப்பெருமான் சூரனைச் சேவலும் மயிலுமாக ஆக்கினார்.
- ☐ சேவலைத் தன் கொடியாகவும் மயிலைத் தன் வாகனமாகவும் கொண்டருளினார்.
- ☐ தீய குணங்களை / தீய செயல்களை நீக்கினால் இறைவனின் அருளைப் பெறலாம்.

- பாடத்தின் கருப்பொருளை மாணவர்கள் கூறுவதற்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.

**செயற்பாடு 4**

- கந்தசஷ்டி விரதம் பற்றி மாணவர்களுடன் கலந்துரையாடுங்கள்.
- விரத நாட்களில் ஆலயம் செல்லல், கந்தபுராணம் படித்தல், சூரசங்காரம் நிகழ்வு நடைபெறல் பற்றி மாணவர்கள் சுயமாகக் கூற வழிப்படுத்துங்கள்.

**கணிப்பீடு :**

- சூரன் போர் பற்றித் தமது மொழிநடையில் கூறுவார்.
- முருகப்பெருமானைப் பக்தியுடன் வழிபடுவார்.
- நற்செயல்களில் ஈடுபடுவார்.

**நடைமுறை வாழ்வில் பிரயோகித்தல் :**

- நற்செயல்களில் ஈடுபட்டு மனநிறைவடைதல்

## தொனிப்பொருள் : 5.0 சமயக் கதைகள்

**தேர்ச்சி** : சமயக் கதைகள் ஊடாக சமய உணர்வு, நம்பிக்கை என்பவற்றை விருத்தி செய்வார்.

**உள்ளடக்கம்** :

- இறை நம்பிக்கையை ஊட்டும் சமயக் கதைகள்
  - கண்ணன் பெருமை (காலிங்க நர்த்தனம்)

**கற்றற் பேறுகள்** :

- கதைகளை இறை நம்பிக்கையுடனும் இரசனையுடனும் கூறுவார்.
- கதைகளைப் பாத்திரமேற்று நடித்துக் காட்டுவார்.
- இறைவனின் கருணையை உணர்ந்து பக்தியுடன் வணங்குவார்.

**வளங்கள்** :

- கண்ணனின் படங்கள்
- கதைப் படங்கள் - காலிங்க நர்த்தனம்
- பக்கப் புரட்டி

**கற்றல் கற்பித்தல் அணுகுமுறைகள்** :

**செயற்பாடு 1**

- மாணவர்கள் கதையைச் செவிமடுத்துத் துலங்குவதற்குப் பொருத்தமான அல்லது காணொளிக் காட்சிக்கான இடத்தில் அமரச் செய்யுங்கள்.
- கண்ணனின் படங்களைக் காட்சிப்படுத்துங்கள். அவதானிக்க வழிப்படுத்துங்கள்.
- கண்ணன் பற்றி மாணவர் அறிந்தவற்றைச் சுயமாகக் கூற ஊக்கப்படுத்துங்கள்.
- ‘கண்ணன்’ எம்மைக் காக்கும் கடவுள் விஷ்ணுவின் திருவவதாரமே என்பதை அறிவுறுத்துங்கள்.
- கண்ணன் நடனம், ஆடல், பாடல்களை வெளிப்படுத்த மாணவர்களுக்குச் சந்தர்ப்பம் அளியுங்கள்.

**செயற்பாடு 2**

- ‘காலிங்க நர்த்தனம்’ கதைப் படங்களைப் பக்கப் புரட்டி மூலம் அல்லது காணொளிக் காட்சி மூலம் கண்டுகளிக்க வாய்ப்பளியுங்கள்.
- காலிங்க நர்த்தனம் பற்றி மாணவர்கள் அறிந்தவற்றைக் கூறச் சந்தர்ப்பம் அளியுங்கள்.
- ‘காலிங்க நர்த்தனம்’ கதையைச் சுவைபட மாணவர்களுக்குக் கூறுங்கள்.
- மாணவர் கதையைச் செவிமடுத்துக் கிரகித்துள்ளார்களா? என்பதைச் சிறிய சிறிய வினாக்கள் வினவி அறிந்து தெளிவுபடுத்துங்கள்.

**செயற்பாடு 3**

- மாணவர்களைக் கதையைச் செவிமடுத்து, துலங்குவதற்குப் பொருத்தமான இடத்திற்கு அழைத்துச் செல்லுங்கள்.
- அரைவட்டத்தில் நிற்கச் செய்யுங்கள்.
- பாடநூல் - காலிங்க நர்த்தனம் பாடத்தை மெய்ப்பாடு தோன்ற வாசித்துக் காட்டுங்கள். அதனைக் கிரகிப்பதற்கு மாணவர்களை வழிப்படுத்துங்கள்.
- ஆசிரியர் வாசிக்கும்போது கதைக்கு ஏற்றவாறு மாணவர்கள் அனைவரும் ஒலியெழுப்பிப்

பொருத்தமானவாறு அபிநயத்துத் துலங்க வழிப்படுத்துங்கள்.

- மாணவர்கள், வாசிப்புக்கேற்றவாறு சுயமாகத் துலங்குவதற்கு / அபிநயத்துச் செயற்படுவதற்கு ஊக்கப்படுத்துங்கள்.

**செயற்பாடு 4**

- ‘காலிங்க நர்த்தனம்’ கதையை மாணவர்கள் கூறுவதற்குச் சந்தர்ப்பமளியுங்கள்.
- காக்கும் கடவுள் - விஷ்ணு; விஷ்ணுவின் அவதாரங்களில் ஒன்று கிருஷ்ண அவதாரம் (கண்ணன்) என்பதை மாணவர்களுக்கு விளக்கிக் கூறுங்கள்.
- மாணவர் அறிந்த தசாவதாரத்துடன் தொடர்புடைய கதைகளைக் கூற ஊக்கப்படுத்துங்கள்.
- எல்லா உயிர்களையும் காப்பவர் இறைவனே என்பதை தசாவதாரக் கதைகள் மூலம் மாணவர்கள் உணர்ந்துகொள்ளச் செய்யுங்கள்.

**கணிப்பீடு :**

- சமயக் கதைகளை இறை நம்பிக்கையுடன் கூறுவார்.
- காக்கும் கடவுள் விஷ்ணு/கண்ணன் எனக் கூறுவார்.
- இறை வழிபாட்டில் நம்பிக்கையுடன் ஈடுபடுவார்.

**நடைமுறை வாழ்வில் பிரயோகித்தல் :**

- நாள்தோறும் இறைவனை நம்பிக்கையுடன் வழிபடுதல்

## தொனிப்பொருள் : 6.0 இறையடியார்கள்

**தேர்ச்சி** : நாயன்மார்களதும், அருளாளர்களதும் வாழ்வினை முன்மாதிரியாகக் கொண்டு ஒழுகுவார்.

**உள்ளடக்கம் :**

- நாயன்மார்களது வாழ்வினை முன்மாதிரியாகக் கொண்டு ஒழுகுதல்
  - திருநீற்றின் மகிமை (வெப்புநோய் தீர்த்த சம்பந்தர்)

**கற்றற் பேறுகள் :**

- திருஞானசம்பந்தர் கதையை இரசனையுடன் கூறுவார்.
- இக்கதையைப் பாத்திரமேற்று நடித்துக் காட்டுவார்.
- இறைவனின் கருணையை உணர்ந்து பக்தியுடன் வணங்குவார்.

**வளங்கள் :**

- திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாரின் படம்
- பக்கப்புரட்டி, வெப்பு நோய் தீர்த்த கதைப் படங்கள்

**கற்றல் கற்பித்தல் அணுகுமுறைகள் :**

**செயற்பாடு 1**

- திருஞானசம்பந்தரது படமொன்றினைக் காட்சிப்படுத்துங்கள். அவர் அருளிய தேவாரங்கள் பற்றி நினைவூட்டிக் கலந்துரையாடுங்கள்.
- தரம் 2 இல் கற்ற "மந்திரமாவது நீறு" எனும் பதிகத்தைக் காட்சிப்படுத்துங்கள். அதனை ஓதச் செய்யுங்கள்.
- பதிகம் திருநீற்றின் பெருமையை / மகிமையைக் கூறுகிறது என்பதை விளக்குங்கள்.
- திருநீற்றின் சிறப்புகள் பற்றி மாணவர்கள் அறிந்திருக்கும் விடயங்களைக் கேட்டு உரையாடுங்கள்.
- திருநீற்றின் (மருத்துவ) சக்தியை உணர்த்தும் கதைகள், சம்பவங்களைக் கூறி, திருநீற்றின் முக்கியத்துவத்தை மாணவர்கள் மனதில் பதியச்செய்யுங்கள்.

**செயற்பாடு 2**

- மாணவர்களை வெளியே அழைத்துச்செல்லுங்கள்.
- மந்திரமாவது நீறு என்ற தேவாரப் பதிகம் பாடப்பெற்ற சந்தர்ப்பம் பற்றி வினவி உரையாடுங்கள்.
- பாடநூலிலுள்ள "வெப்புநோய் தீர்த்த சம்பந்தர்" கதையைச் சுவாரசியமாகக் கூறுங்கள்.
- கதையில் வரும் பாத்திரங்கள் மற்றும் திருநீற்றின் பெருமையை வினாவிடை முறை மூலம் கேட்டுக் கற்றலை உறுதிசெய்யுங்கள்.

**செயற்பாடு 3**

- பாதணிகளைக் கழற்றி அதற்குரிய இடங்களில் வைக்குமாறு மாணவர்களுக்கு அறிவுறுத்தல் வழங்குங்கள்.
- பாதணிகளை ஏன் கழற்ற வேண்டும் என்பதை அவர்களுக்கு விளக்கிக் கூறுங்கள்.
- திருமுறை ஓதுமுன்னரும் ஓதிய பின்னரும் "திருச்சிற்றம்பலம்" கூறுவதை வலியுறுத்துங்கள்.

செயற்பாடு 4

- "வெப்புநோய் தீர்த்த சம்பந்தர்" கதையை நாடகமாக்கி நடிப்பதற்கு மாணவர்களை வழிப்படுத்துங்கள்.
- மாணவர்களைக் குழுக்களாக்கி, குழு நிலையில் நாடகத்தை முன்வைப்பதற்கு மாணவர்களுக்கு உதவுங்கள். (தேவைப்படின் நாடக ஆசிரியரின் உதவியைப் பெற்றுக் கொள்ள முடியும்)

**கணிப்பீடு :**

- திருநீற்றின் மகிமையைக் கதையூடாக விளக்கிக் கூறுவார்.
- 'வெப்புநோய் தீர்த்த சம்பந்தர்' என்னும் கதையை நாடகமாக நடிப்பார்.

**நடைமுறை வாழ்வில் பிரயோகித்தல் :**

- திருநீற்றின் மகிமையை உணர்ந்து அதனை எந்நாளும் அணியும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ளல்

## தொனிப்பொருள் : 6.0 இறையடியார்கள்

**தேர்ச்சி** : நாயன்மார்களதும், அருளாளர்களதும் வாழ்வினை முன்மாதிரியாகக் கொண்டு ஒழுகுவார்.

**உள்ளடக்கம்** :

- நாயன்மார்களது வாழ்வினை முன்மாதிரியாகக் கொண்டு ஒழுகுதல்
  - சுண்ணாம்பு அறையில் அப்பர்

**கற்றற் பேறுகள்** :

- திருநாவுக்கரசர் கதையினை இரசனையுடன் கூறுவார்.
- இக்கதையைப் பாத்திரமேற்று நடித்துக் காட்டுவார்.
- இறைவனின் கருணையை உணர்ந்து பக்தியுடன் வணங்குவார்.

**வளங்கள்** :

- திருநாவுக்கரசர் படம்
- பக்கப்புரட்டி, சுண்ணாம்பு அறையில் அப்பர் கதைப் படங்கள்

**கற்றல் கற்பித்தல் அணுகுமுறைகள்** :

**செயற்பாடு 1**

- உழவாரத்துடன் இருக்கும் திருநாவுக்கரசு நாயனாரின் படத்தைக் காட்சிப்படுத்துங்கள்.
- (இயலுமாயின்) நாவுக்கரசருக்குச் சமணர்கள் செய்தவற்றைச் சூசுகமாக விளக்குங்கள்.
- செவிவழியாக அறிந்தவற்றையும் திருநாவுக்கரசு நாயனார் பற்றித் தரம் ஒன்றிலும் தரம் இரண்டிலும் கற்ற விடயங்களையும் ஞாபகப்படுத்தும் முகமாகச் சில வினாக்களை வினவுங்கள்.
  உதாரணம் : நாயனாரின் பெயர், கையில் வைத்திருக்கும் பொருள் ......

**செயற்பாடு 2**

- மாணவர்களை வட்டமாக அமரச்செய்யுங்கள்.
- பாடநூலிலுள்ள “சுண்ணாம்பறையில் அப்பர்” என்ற கதையை மாணவர்களுக்கு உணர்வுபூர்வமாகக் கூறுங்கள்.
- வாசிக்கும்போது இடையிடையே சில வினாக்களை வினவி, மாணவர் கிரகித்தலை உறுதிசெய்யுங்கள்.

**செயற்பாடு 3**

- மாணவர்கள் பாடநூலிலுள்ள கதையை நன்கு வாசிக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- அதன் பின்னர் வினா - விடைப் போட்டியை நடத்துங்கள்.
- மாணவர்களை இரு குழுக்களாக்குங்கள்.
- போட்டி விதிமுறைகளைக் கூறுங்கள்.
- குறித்த குழுவில் உள்ளவருக்குரிய வினாவை வினவும்போது அவர் பதிலளித்தால் 5 நட்சத்திரக் குறிகள். அவருக்கு இயலாதபட்சத்தில் அவரது குழுவிலுள்ள இன்னொருவர் பதிலளித்தால் 3 நட்சத்திரக் குறிகள். மற்றைய குழுவுக்கு அச்சந்தர்ப்பம் வழங்கப்பட்டு யாராவது பதிலளித்தால் 4 நட்சத்திரக் குறிகள் என்றவாறு வழங்குங்கள்.
- மாணவர்கள் உற்சாகமாகப் போட்டியில் பங்குபற்றுவதற்கு ஊக்கமளியுங்கள்.
- மாதிரி வினாக்கள் - பின்னிணைப்பாகத் தரப்பட்டுள்ளன.

**செயற்பாடு 4**

- மாணவர்களை அரைவட்டமாக அமரச்செய்யுங்கள்.
- பாடநூலினூடாக நாவுக்கரசர் பற்றிக் கற்றதிலிருந்து இவ்விரு வாக்கியங்கள் கூறுவதற்கு மாணவர்கள் அனைவருக்கும் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- 'திருநாவுக்கரசு நாயனார்' எனும் தலைப்பில் 3 வாக்கியங்களைச் சுயமாக எழுதுமாறு கூறுங்கள். இடர்ப்படும் மாணவர்களுக்கு உதவுங்கள்.

**செயற்பாடு 5**

- மாணவர்களை 4 /5 பேர் கொண்ட குழுக்களாக்குங்கள்.
- 'சுண்ணாம்பறையில் அப்பர்' என்ற கதையைக் குழுவாக இணைந்து சுருக்கமாகக் கூறுவதற்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.

**கணிப்பீடு :**

- கடவுளை நம்பினார் கைவிடப்படார் என்பதை விளக்கிக் கூறுவார்.
- திருநாவுக்கரசு நாயனார் பற்றி இரு வாக்கியங்கள் கூறுவார்.
- திருநாவுக்கரசு நாயனார் கதையைச் சுருக்கமாகக் கூறுவார்.

**நடைமுறை வாழ்வில் பிரயோகித்தல் :**

- கடவுளை பக்தி சிரத்தையுடனும் நம்பிக்கையுடனும் வழிபட்டால் அவரருள் கிடைக்கும் என்ற மனப்பாங்கைப் பெறுதல்

**பின்னிணைப்பு :**

**வினாவிடைப் போட்டிக்கான மாதிரி வினாக்கள் :**

01. திருநாவுக்கரசரின் தமக்கையார் யார்?
02. திலகவதியார் மனம் வருந்தியமைக்கான காரணம் என்ன?
03. திலகவதியார் தமது குறையை யாரிடம் முறையிட்டார்?
04. திருநாவுக்கரசருக்கு வந்த நோய் யாது?
05. நோயால் வருந்திய நாவுக்கரசரைத் திலகவதியார் எங்கு அழைத்துச்சென்றார்?
06. திலகவதியார் தம்பியிடம் உடல் முழுவதும் பூசுமாறு கொடுத்த பொருள் யாது?
07. திருவைந்தெழுத்து எவை?
08. திருநாவுக்கரசர் முதலில் பாடிய தேவாரம் எது?
09. சமணர்கள் நாவுக்கரசரைத் தண்டிக்க நினைத்தது ஏன்?
10. சமணர்கள் நாவுக்கரசரை எங்கு அடைத்தனர்?
11. அச்சந்தர்ப்பத்தில் அவர் பாடிய தேவாரம் யாது?
12. அப்பொழுது என்ன மாற்றம் நிகழ்ந்தது?
13. இக்கதை நமக்கு உணர்த்துவது யாது?

## தொனிப்பொருள் : 6.0 இறையடியார்கள்

**தேர்ச்சி** : நாயன்மார்களதும், அருளாளர்களதும் வாழ்வினை முன்மாதிரியாகக் கொண்டு ஒழுகுவார்.

**உள்ளடக்கம்** :

- நாயன்மார்களது வாழ்வினை முன்மாதிரியாகக் கொண்டு ஒழுகுதல்
  - செங்கட்டிகள் பொன்கட்டிகளாக மாறியமை

**கற்றற்பேறுகள்** :

- சுந்தரமூர்த்தி நாயனாரின் கதையினை இரசனையுடன் கூறுவார்.
- இக்கதையைப் பாத்திரமேற்று நடித்துக் காட்டுவார்.
- இறைவனின் கருணையை உணர்ந்து பக்தியுடன் வணங்குவார்.

**வளங்கள்** :

- சுந்தரமூர்த்தி நாயனார் படம்
- பக்கப்புரட்டி, செங்கட்டிகள் பொன்கட்டிகளாக மாறியமை பற்றிய கதைப் படங்கள்

**கற்றல் கற்பித்தல் அணுகுமுறைகள்** :

**செயற்பாடு 1**

- சுந்தரமூர்த்தி நாயனாரின் படத்தைக் காட்சிப்படுத்துங்கள்.
- சுந்தரமூர்த்தி நாயனார் பற்றி மாணவர்கள் ஏற்கனவே அறிந்துவைத்திருக்கும் விடயங்களைக் கேட்டறியுங்கள்.
- தரம் 2 இல் கற்ற பித்தா பிறைசூடி... என்ற தேவாரத்தைக் கரும்பலகையில் காட்சிப்படுத்துங்கள்.
- மாணவர்கள் அதனை ஓதுவதற்குச் சந்தர்ப்பமளியுங்கள்.

**செயற்பாடு 2**

- மாணவர்களை வட்டமாக அமரச் செய்யுங்கள்.
- சுந்தரமூர்த்தி நாயனாரின் கதையைச் சுருக்கமாகக் கூறுங்கள்.
- இறைவனைத் தோழனாகக் கருதி வழிபட்டவர் என்பதை விளக்குங்கள்.
- செங்கட்டிகளைப் பொன்கட்டிகளாக மாற்றிய கதையைச் சுவைபடக் கூறுங்கள்.

**செயற்பாடு 3**

- மாணவர்களைச் சோடிகளாக்குங்கள்.
- முதலிரு பந்திகளையும் ஒருவர் உரத்து வாசிக்க மற்றையவர் செவிமடுக்கவும் பின்னர் அடுத்த இரு பந்திகளையும் செவிமடுத்தவர் வாசிக்க முதலாமவர் செவிமடுக்கவும் வாய்ப்பளியுங்கள்.
- மாணவர்களைச் சிறிய குழுக்களாக்குங்கள்.
- சுந்தரமூர்த்தி நாயனார் பற்றி இரு வாக்கியங்கள் கூறச் செய்யுங்கள்.
- சுந்தரமூர்த்தி நாயனார் பற்றித் தாமறிந்தவற்றை எழுதுவதற்கு வழிகாட்டுங்கள்.
- இடர்ப்படும் மாணவர்களுக்கு உதவுங்கள்.

**கணிப்பீடு** :

- சுந்தரமூர்த்தி நாயனார் பற்றி இரு வாக்கியங்கள் வழுவின்றிக் கூறுவார்.
- செங்கட்டிகளைப் பொன்கட்டிகளாக மாற்றிய கதையைச் சுருக்கமாகக் கூறுவார்.

**நடைமுறை வாழ்வில் பிரயோகித்தல்** :

- கடவுள் எல்லாம் அறிந்தவர், எம்குறை தீர்ப்பவர் என்ற நம்பிக்கையுடன் வழிபடுதல்

## தொனிப்பொருள் : 7.0 சமய ஒழுக்கங்களும் விழுமியங்களும்

**தேர்ச்சி** : வாழ்க்கை விழுமியங்களை அறிந்து அவற்றைக் கடைப்பிடிப்பார்.

**உள்ளடக்கம்** :
- சமய நற்பண்புகள்
  - பிறருக்கு உதவுவோம்

**கற்றற்பேறுகள்** :
- வயோதிபர், ஏழைகளுக்கு தம்மால் இயன்றவற்றைக் கொடுத்துதவுவார்.
- பிறருக்கு உதவுவதன் மூலம் இறைவனின் அன்பைப் பெறலாம் என்பதனைக் கூறுவார்.

**வளங்கள்** :
- பிறருக்கு உதவுவது போன்ற காட்சிப் படங்கள்

**கற்றல் கற்பித்தல் அணுகுமுறைகள்** :

செயற்பாடு 1
- மாணவர்களை அரைவட்டமாக அமரச்செய்யுங்கள்.
- பிறருக்கு உதவும் காட்சிப் படங்களை வகுப்பறையில் காட்சிப்படுத்துங்கள்.
- அப்படங்கள் மாணவர் மனதில் தோற்றுவிக்கும் எண்ணங்களை வகுப்பறையில் பகிர்ந்து கொள்ளச் சந்தர்ப்பமளியுங்கள்.
- “ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காணலாம்”, “மக்கள் சேவையே மகேசன் சேவை” என்றெல்லாம் கூறப்படுபவற்றின் விளக்கத்தை எடுத்துக்கூறுங்கள்.

செயற்பாடு 2
- மாணவர்களை அரைவட்டமாக அமரச் செய்யுங்கள்.
- பாடநூலிலுள்ள ‘பிறருக்கு உதவுவோம்’ என்ற நாடகத்தின் கதைச் சுருக்கத்தைக் கூறுங்கள்.
- பாடத்தை நாடகப் பாணியில் உரத்து வாசியுங்கள்.
- மாணவர்கள் பிறருக்கு உதவிய சந்தர்ப்பங்களைக் கூறுவதற்கு வழிப்படுத்துங்கள்.

செயற்பாடு 3
- மாணவர்களைச் சிறு குழுக்களாக்குங்கள்.
- நாடகத்தை நடித்துக் காட்டச் சந்தர்ப்பமளியுங்கள்.
- நாடகத்தை நடிப்பதன் ஊடாகப் பிறருக்கு உதவும் எண்ணத்தைப் பதியவையுங்கள்.

செயற்பாடு 4
- மாணவர்களைச் சிறு குழுக்களாக்குங்கள்.
- ‘பிறருக்கு உதவுவோம்’ என்ற பாடத்தைச் சுருக்கமாகக் கூறச் சந்தர்ப்பமளியுங்கள்.
- பாடத்தில் வரும் பாத்திரங்கள் பிரதிபலிக்கும் நற்குணங்களை எழுதச் செய்யுங்கள்.
- மாணவர்களை எழுமாற்றாக எழுப்பி எழுதியவற்றை வாசிக்கச் செய்யுங்கள்.

**கணிப்பீடு** :
- பாடத்தின் கதையைச் சுருக்கமாகத் தமது மொழிநடையில் கூறுவார்.
- நாடகப் பாத்திரமொன்றின் நற்பண்புகள் சிலவற்றை எழுதுவார்.
- தான் பிறருக்கு உதவிய சந்தர்ப்பம் ஒன்றைக் கூறுவார்.

**நடைமுறை வாழ்வில் பயன்படுத்தல்** :
- உதவி தேவைப்படுபவர்களுக்கு எச்சந்தர்ப்பத்திலும் உதவுதல்

## தொனிப்பொருள் : 7.0 சமய ஒழுக்கங்களும் விழுமியங்களும்

**தேர்ச்சி** : வாழ்க்கை விழுமியங்களை அறிந்து அவற்றைக் கடைப்பிடிப்பார்.

**உள்ளடக்கம்** :
- சமய நற்பண்புகள்
  - உயிர்களிடம் கருணை காட்டுவோம்.

**கற்றற் பேறுகள்** :
- எல்லா உயிர்களிடமும் இரக்கம் காட்டுவார்.
- அவற்றுக்கு உணவும் நீரும் வழங்குவார்.

**வளங்கள்** :
- மனிதர்கள் பிராணிகளிடம் அன்பு காட்டுவது தொடர்பான காட்சிப் படங்கள்
- பொருத்தமான கதை

**கற்றல் கற்பித்தல் அணுகுமுறைகள்** :

**செயற்பாடு 1**
- பிராணிகளை அன்புடன் பராமரிக்கும் படங்கள் சிலவற்றைக் காட்சிப்படுத்துங்கள்.
- பிராணிகளோடு அவர்கள் பழகும் விதங்கள் பற்றிக் கலந்துரையாடுங்கள்.
- நாம் பிராணிகள் மீது ஏன் அன்பு செலுத்தவேண்டும்? என்று வினவிக் கலந்துரையாடுங்கள்.
- தரம் 2 இல் கற்ற பிராணிகள் மீது அன்புசெலுத்தும் கதையை நினைவூட்டி உரையாடுங்கள்.
- வீட்டில் நீங்கள் பிராணிகளை வளர்க்கிறீர்களா? என வினவுங்கள். 'ஆம்' என்று விடையளிப்போரிடம் எவ்வாறு பராமரிக்கிறீர்கள்? என வினவுங்கள். அவர்கள் கூறும் விடைகளின் ஊடாக உயிர்களிடத்தில் அன்பு காட்ட வேண்டும் என்ற எண்ணத்தை மாணவர் மனதில் விதையுங்கள்.

**செயற்பாடு 2**
- மாணவர்களை வட்டமாக அமரச் செய்யுங்கள்.
- பாடநூலிலுள்ள **'உண்ணும் போதொரு கைப்பிடி'** என்ற கதையை உணர்வுபூர்வமாகக் கூறுங்கள்.
- உண்ணுமுன் ஏன் உணவில் சிறு பகுதியை உருண்டையாக வைத்தனர் என்ற வினாவை எழுப்பி மாணவர்கள் சிந்திப்பதற்கு இடமளியுங்கள்.
- கதையை மாணவரே வாசித்து விடையைக் கூறுவதற்கு சந்தர்ப்பமளியுங்கள்.
- அதன் பின்னர் பிராணிகள் மீது நாம் அன்பு செலுத்தவேண்டும் என்ற எண்ணத்தை மாணவர்களிடம் வெளிக்கொணர முயலுங்கள்.

**செயற்பாடு 3**
- பாடநூலிலுள்ள 'உண்ணும்போதொரு கைப்பிடி' என்ற கதையை உரத்து வாசியுங்கள்.
- மாணவர்கள் கிரகிக்கின்றனரா? என்பதை உறுதிசெய்ய இடையிடையே சிறு வினாக்களை எழுப்பிய வண்ணம் வாசியுங்கள்.
- மாணவர்களைச் சிறு சிறு குழுக்களாக்கி அவர்களிடையே கதையை வாசிக்க ஆர்வமூட்டுங்கள். இடர்ப்படும் மாணவர்களுக்கு அவ்வப்போதே உதவுங்கள்.
- மாணவர்களுக்கு வினாக்களை வழங்கி விடையெழுத வழிப்படுத்துங்கள்.

**கணிப்பீடு :**

- உயிர்களிடத்தில் அன்பு செலுத்தவேண்டியதன் அவசியம் பற்றி எடுத்துரைப்பார்.
- உயிர்களிடத்தில் எவ்வாறு அன்பு செலுத்துகிறோம் என்பதைக் கூறுவார்.

**நடைமுறை வாழ்வில் பிரயோகித்தல் :**

- எல்லா உயிர்களிடத்திலும் எப்போதும் அன்பு செலுத்துதல்

## தொனிப்பொருள் : 7.0 சமய ஒழுக்கங்களும் விழுமியங்களும்

**தேர்ச்சி** : வாழ்க்கை விழுமியங்களை அறிந்து அவற்றைக் கடைப்பிடிப்பார்.

**உள்ளடக்கம்** :

- சமய நற்பண்புகள்
  - உண்மை பேசுவோம்.

**கற்றற்பேறுகள்** :

- எச்சந்தர்ப்பத்திலும் உண்மை பேசுவார்.
- எல்லா விடயங்களையும் தாய், தந்தை, ஆசிரியரிடம் ஒழிவுமறைவின்றிக் கூறுவார்.
- பாடசாலையில் சகல செயற்பாடுகளின்போதும் உண்மை பேசுவார்.

**வளங்கள்** :

- உண்மையின் பயன் - கதைப் படங்கள்
- பக்கப் புரட்டி

**கற்றல் கற்பித்தல் அணுகுமுறைகள்** :

**செயற்பாடு 1**

- மாணவர்களைக் கதை கூறலுக்கான பொருத்தமான இடத்திற்கு அழைத்துச் சென்று அமரச் செய்யுங்கள்.
- பக்கப் புரட்டி மூலம் கதையின் ஒழுங்குமுறையான படங்களை முன்னுரிமைப்படுத்தி ஒவ்வொன்றாக மாணவர்களை அவதானிக்க வைத்து அவை பற்றிய கதையை ஊகித்துக்கூற வழிப்படுத்துங்கள்.
- ஆசிரியர் படங்களைத் துணையாகக் கொண்டு கதையைக் கட்டியெழுப்புங்கள்.
- கதையைச் சுவைபடக் கூறுங்கள்.

**செயற்பாடு 2**

- மாணவர்களை வட்டமாக அமரச் செய்யுங்கள்.
- உண்மையின் பயன் என்ற பாடத்தினை ஆசிரியர் வாசித்துக் காட்டுங்கள். (பாடநூலைத் துணையாகக் கொள்ளுங்கள்)
- அவ்வப்போது வினாக்களைக் கேட்டு மாணவரது அவதானித்தல், கிரகித்தல் திறன்களை மேம்படுத்துங்கள்.
- கதையின் கருத்தினைச் சுயமாக முன்வைப்பதற்கு மாணவர்களுக்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.

**கணிப்பீடு** :

- உண்மையின் பயன் பற்றிக் கூறுவார்.
- எப்போதும் உண்மை பேசுவார்.

**நடைமுறை வாழ்வில் பிரயோகித்தல்** :

- வாழ்வில் எப்போதும் உண்மை பேசுதல்

## தொனிப்பொருள் : 7.0 சமய ஒழுக்கங்களும் விழுமியங்களும்

**தேர்ச்சி** : வாழ்க்கை விழுமியங்களை அறிந்து அவற்றைக் கடைப்பிடிப்பார்.

**உள்ளடக்கம்** :

- சமய நற்பண்புகள்
- ஒற்றுமையாக இருப்போம்.

**கற்றற் பேறுகள்** :

- பாடசாலையில் சகபாடிகளுடன் ஒற்றுமையாக இருப்பார்.
- நண்பர்களுடன் ஒற்றுமையாக விட்டுக்கொடுப்பதன் மூலம் மகிழ்ச்சியாக வாழ முடியும் என்பதை உணர்ந்து செயற்படுவார்.

**வளங்கள்** :

- பொருத்தமான கதைப் படங்கள்

**கற்றல் கற்பித்தல் அணுகுமுறைகள்** :

**செயற்பாடு 1**

- மாணவர்கள் தனியாகவும் குழுவாகவும் செயற்படுவதற்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள். குழுவாகச் செயற்படுவதால் கிடைக்கும் நன்மைகளைக் கேட்டறியுங்கள்.
- எக்காரியத்தையும் ஒற்றுமையாகச் சேர்ந்து செய்யும் போது அதனை இலகுவாகவும் விரைவாகவும் செய்து முடிக்கலாம் என்பதைத் தெளிவுபடுத்துங்கள்.
- மாணவர்கள் பாடசாலையிலும், வீட்டிலும் (சகோதர சகோதரிகளுடன்) ஒற்றுமையாகச் சேர்ந்து செய்த விடயங்கள் தொடர்பாகக் கேட்டறியுங்கள்.

**செயற்பாடு 2**

- ஒற்றுமையை வெளிப்படுத்தும், பொருத்தமான கதைப் படங்களைப் பயன்படுத்திக் கதையொன்றை (மாணவர்களின் வயது மட்டத்திற்குப் பொருத்தமான)மாணவர்கள் கேட்டு இரசிக்கும் வண்ணம் கூறுங்கள்.
- கதை வலியுறுத்தும் ஒற்றுமையின் உயர்வு பற்றி அவர்களாகவே முன்வந்து கூறுவதற்கு ஆர்வமூட்டுங்கள்.

**கணிப்பீடு** :

- தாம் பாடசாலையில் ஒற்றுமையாகச் செயற்பட்ட சந்தர்ப்பம் ஒன்றினைக் கூறுவார்.
- தான் வீட்டில் ஒற்றுமையாகச் செய்த அல்லது செய்யும் வேலைகள் சில கூறுவார்.
- ஒற்றுமையாகச் செயற்படுவதால் கிடைக்கும் நன்மைகளை உணர்ந்து கூறுவார்.

**நடைமுறை வாழ்வில் பிரயோகித்தல்**

- வாழ்வில் எப்போதும் எவ்வேளையிலும் ஒற்றுமையாகச் செயற்படுதல்

## தொனிப்பொருள் : 7.0 சமய ஒழுக்கங்களும் விழுமியங்களும்

**தேர்ச்சி** : வாழ்க்கை விழுமியங்களை அறிந்து அவற்றைக் கடைப்பிடிப்பார்.

**உள்ளடக்கம்** :
- சமய நற்பண்புகள்
- பகிர்ந்துண்போம்

**கற்றற் பேறுகள்** :
- 'பகிர்ந்து உண்ணல்' நற்பண்புகளில் ஒன்று என்பதனை உணர்ந்து செயற்படுவார்.
- பிறருக்கு கொடுத்து உண்ணும் பழக்கத்தினைக் கடைப்பிடிப்பார்.
- தமக்குக் கிடைக்கும் சிறிதளவு உணவையும் பகிர்ந்து உண்பார்.
- சக மாணவர்களுடன் பகிர்ந்து உண்டு ஒற்றுமையாகச் செயற்படுவார்.

**வளங்கள்** :
- உணவுப் பொருள்
- பகிர்ந்து உண்ணும் நிகழ்வைக் காட்டும் படங்கள்

**கற்றல் கற்பித்தல் அணுகுமுறைகள்** :

**செயற்பாடு 1**
- மாணவர்களை வகுப்பிற்கு வெளியே அழைத்துச் செல்லுங்கள்.
- 'பகிர்ந்து உண்ணுதல்' என்றால் என்னவென்பதை மாணவர்களுக்கு விளக்கி, அது சைவசமயப் பண்புகளில் ஒன்று என்பதைத் தெளிவுபடுத்துங்கள்.
- பகிர்ந்துண்பதன் மூலம் நாம் அடையும் மகிழ்ச்சி பற்றிக் கலந்துரையாடுங்கள்.
- 'பகிர்ந்துண்ணல்' பற்றி மாணவர் அறிந்துவைத்திருக்கும் கதை / கதைகளைக் கூறச் சந்தர்ப்பமளியுங்கள்.
- சகோதரர்களுடனும் நண்பர்களுடனும் உறவினர்களுடனும் பகிர்ந்துண்ட சந்தர்ப்பங் களைக் கூறச் சந்தர்ப்பமளியுங்கள்.

**செயற்பாடு 2**
- வகுப்பில் இடைவேளையின் போது உணவு கொண்டு வராத மாணவர்களுக்கு உணவு கொண்டு வந்த மாணவர்கள் பகிர்ந்து கொடுத்து உண்ணுதல் தொடர்பான சிந்தனையை மாணவர்களிடம் ஏற்படுத்துங்கள். (செயற்படுத்துங்கள்)
- வகுப்பறையில் மாணவர்களை விருப்புடன் உணவுப் பொருள்களைப் பகிர்ந்து உண்ண வழிப்படுத்துங்கள்.
- விசேட தினங்களில் உறவினர்களுடன் பகிர்ந்து உண்பதன் முக்கியத்துவத்தை வலியுறுத்துங்கள்.
- வாழ்வில் எப்போதும் எச்சந்தர்ப்பத்திலும் பகிர்ந்துண்ணும் பழக்கத்தைக் கடைப்பிடிக்க வழிப்படுத்துங்கள்.

**கணிப்பீடு** :
- விருப்புடன் பகிர்ந்து உண்ணும் பண்பைக் கடைப்பிடிப்பார்.
- பகிர்ந்துண்ட சந்தர்ப்பங்களைக் கூறுவார்.

**நடைமுறை வாழ்வில் பிரயோகித்தல்** :
- வாழ்வில் எப்போதும் எச்சந்தர்ப்பத்திலும் பகிர்ந்து உண்ணும் பண்பைக் கடைப்பிடித்தல்

## சைவ மாணவர்கள் கடைப்பிடிக்க வேண்டியவை

**01.** எக்கருமத்தையும் ஆற்றுவதற்கு முன்னர் கடவுளை வழிபடும் பண்பினைக் கடைப்பிடித்தல்

**02.** கடவுள் எங்கும் உள்ளார், எல்லாம் அறிவார், எம்மைக் காப்பவர் என்ற உணர்வினைப் பேணல்

**03.** சூரிய உதயத்தின் முன் நித்திரை விட்டெழும்புதல்

**04.** காலையில் வீட்டு முற்றத்தில் மாக்கோலம் போடுதல்

**05.** காலையும் மாலையும் வீட்டில் விளக்கேற்றிச் சுவாமியை வணங்குதல்

**06.** காலை எழுந்தவுடன் பெற்றோர்களின் பாதங்களைப் பணிந்தெழுதல்

**07.** பிறந்த தினம், விசேட தினங்கள் போன்ற நாட்களில் வயது முதிர்ந்தவர்களிடம் ஆசி பெறுதல்

**08.** வெளியில் செல்லும்போது விபூதி அணிந்து செல்லுதல்

**09.** தினந்தோறும் ஆலய வழிபாட்டில் ஈடுபடுதல். வெள்ளிக்கிழமைகள், விசேட தினங்கள், பண்டிகை நாட்களில் தவறாது ஆலயங்களுக்குச் சென்று வழிபடுதல்

**10.** ஆலயங்களில் வீண் வார்த்தைகள் பேசாது அமைதியாக இறைவனை வழிபடுதல்

**11.** ஆலயங்களின் உள்ளே விளையாடுதல், சண்டையிடுதல், குப்பை போடுதல், எச்சில் உமிழ்தல், உணவு உண்ணல் (பிரசாதம் தவிர்ந்த) தலைமயிர் சீவுதல், பாதணிகள் - தொப்பிகளுடன் செல்லுதல் போன்றவற்றைத் தவிர்த்தல்.

**12.** ஆலயங்களில் எழுந்தருளியிருக்கும் தெய்வங்களைத் தொட்டு வணங்காதிருத்தல்

**13.** கைகளைக் கூப்பியபடியும் "ஓம் நமசிவாய" என்று திருவைந்தெழுத்தை ஓதியபடியும் ஆலய வீதியை வலதுபுறமாக வலம்வருதல்

**14.** ஆலயத் தொண்டுகளில் ஈடுபடுதல்

**15.** பூந்தோட்டம் அமைக்கும்போது மணம் வீசக்கூடிய, இறைவனுக்குச் சாத்துவதற்கு உகந்த பூச்செடிகளையே நாட்டுதல்

**16.** பூசைக்காகப் பூக்களைப் பறிக்கும்போது நல்ல பூக்களைத் தெரிந்தெடுத்துக் காம்புடன் வலது கையினால் பறித்தல்

**17.** பூக்களை முகர்ந்து பார்க்காமலும் கீழே விழுத்தாமலும் கோயிலுக்குக் கொண்டுசெல்லல்

**18.** பூக்களைப் பறிக்கும்போதும் பூமாலை கட்டும்போதும் இறை சிந்தனையுடன் இருத்தல்

**19.** தோத்திரங்கள் பாடும்போது சரியான மெய்ந்நிலையில் நின்றும் பிழையின்றியும் இராகத்துடனும் பக்தியுடனும் உணர்ந்து பாடுதல்

**20.** சமய குரவர்களைப் போற்றி அவர்களது குருபூசைத் தின வழிபாடுகளில் ஈடுபடுதல்

**21.** வீட்டில் விளக்கேற்றியபின் வீட்டைக் கூட்டுவதையும், பூக்களைப் பறிப்பதையும் தவிர்த்தல்

**22.** வீட்டிற்கு வரும் விருந்தினரை இன்முகத்துடன் வரவேற்று உபசரித்தல்

**23.** உணவு உண்ணும்போது காகத்திற்கு வைத்த பின் உண்ணுதல், இறைவனை வணங்கிய பின் உண்ணத் தொடங்குதல்

**24.** இல்லையென்று வருவோர்க்கு உதவுதல்

**25.** முதியவர்கள், உடற்குறைபாடுடையவர்களுக்கு உதவுதல்

## மாணவர் முன்னேற்றத்தைக் கணிப்பிடல்

### 1.0 அறிமுகம்

கற்கும்போது தமது மாணவர்கள் எதிர்நோக்கும் சிரமங்கள், வெளிக்காட்டும் திறமைகள் பற்றிய பூரண விளக்கத்தை, ஆரம்பக்கல்வி ஆசிரியர்கள் நன்கு அறிந்திருத்தல் வேண்டும். அப்போதுதான் ஆரம்பத் தரங்களில் கற்கும் மாணவர்களுக்காகப் பயனுறுதியுள்ள கற்றல் அனுபவங்களை ஒழுங்கு செய்யும் திறனைப் பெற முடியும். வகுப்பிலுள்ள எல்லா மாணவர்களுக்கும், பொருந்தும் வகையில் கற்றல் அனுபவங்களை ஒழுங்கு செய்ய இது வழிகோலும். இந்தப் பரந்த நோக்குடன் வகுப்பறையில் மாணவனது முன்னேற்றம் தொடர்பாக இடையறாது தகவல் சேகரிக்கும் செயன்முறையே கணிப்பீடாகும் எனக் குறிப்பிடலாம். மாணவர்களை முதலாமவர், இரண்டாமவர் என வரிசைப்படுத்துவதோ **சிறந்த மாணவர், பலவீனமான மாணவர் என வகைப்படுத்துவதோ ஆரம்பத்தரங்களில் நடத்தப்படும் கணிப்பீட்டின் நோக்கமல்ல.**

### 2.0 மாணவரைக் கணிப்பிடுவதற்காகப் பயன்படுத்தத்தக்க அணுகுமுறைகள்

மாணவர்களைக் கணிப்பிடுவதற்காகப் பயன்படுத்தும் நுட்பமுறைகளைப் பிரதானமாக இரண்டு விடயங்களின் கீழ் முன்வைக்கலாம்.

### 2.1 மாணவரின் முன்னேற்றத்தை முறைமையாகக் கணிப்பிடல்

கற்பித்தல் செயற்பாட்டைத் தற்காலிகமாக நிறுத்தி முன் கூட்டியே திட்டமிட்டு ஆயத்தஞ்செய்து, முழுக் கவனத்தையும் அதன் மீது செலுத்திச் செய்யப்படும் கணிப்பீட்டை முறைசார் கணிப்பீடு என அறிமுகஞ் செய்யலாம். இதற்காக முறைசார் பரீட்சைகளும் செயற்பாடுகளும் பயன்படுத்தப் படும்.

### 2.2 முறைசாரா உத்திகளைப் பயன்படுத்தி மாணவரின் முன்னேற்றத்தைக் கணிப்பிடல்

மாணவர்கள் கற்றலில் ஈடுபட்டிருக்கும்போதே, அதற்குத் தடங்கல் ஏற்படுத்தாதவாறு தகவல்கள் சேகரிக்கப்படும். இங்கு பிரதானமாக வினாவுதல், மாணவருடன் தனித்தனியாகவோ குழுவாகவோ அளவளாவுதல், மாணவர்கள் வேலைகளில் ஈடுபட்டுள்ளபோது அவர்களை அவதானித்துத் தகவல் சேகரித்தல், மாணவரின் வீட்டு வேலைகளை மதிப்பிடல் போன்ற உத்திகள் பின்பற்றப்படும்.

**இங்கு ஆசிரியரின் தொழில்வாண்மை மிக முக்கியமானதாகும்.** தாம் எடுக்கும் முடிவுகள் மிகச் சரியானவையாக அமையும் வகையில் ஆசிரியர் மிகக் கவனமாகச் செயற்பட வேண்டும்.

எனினும் முறைசாரா உத்திகளின் மூலம் மாணவர்கள் பற்றி விரிவானதும், தரமானதுமான தகவல்கள் பெறப்படுகின்றமையால், அவை கற்றல் - கற்பித்தல் பணிகளைப் பொறுத்தமட்டில் மிகப்பயனுறுதியுள்ளவையாக அமையும் எனலாம்.

ஆசிரியர்கள் தமது மாணவர்கள் பற்றி முறைசாரா வழிகளில் எடுக்கும் முடிவுகளின் தகுதி (Validity) உயர்வானது எனப் பல ஆய்வுகள் காட்டியுள்ளன.

## 3.0 கணிப்பீட்டு வடிவங்கள்

**கணிப்பீட்டை** கற்றல் - கற்பித்தல் செயன்முறையின் வெவ்வேறு சந்தர்ப்பங்களில் நடத்தலாம். அதற்கமைய கணிப்பீட்டுச் செயன்முறையை இறுதி நிலைக் (Summative) கணிப்பீடு, தொடர் (Formative) கணிப்பீடு என வகைப்படுத்தலாம்.

### தொடர் கணிப்பீட்டு முறை

யாதேனும் கற்றல் கட்டத்தின் இடையில் தொடர்ச்சியாக மாணவரின் கற்றல் திறன்களையும், இடர்பாடுகளையும் கண்டறிவதே இதனால் கருப்படுகின்றது. இது தொடர் கணிப்பீடு எனவும் அழைக்கப்படுகின்றது. ஆரம்பத் தரங்களில் மாணவர்கள் கற்றலின்போது எதிர்நோக்கும் இடர்பாடுகளுக்குத் தீர்வுகளைப் பெற்றுக்கொடுத்தல் கட்டாயமானதாகும். இல்லையேல் அவர்கள்

தொடர்ந்து கற்றல் கடினமானதாக அமையும். இவ்வாறு கற்றலில் அடையும் தோல்வியினால் அவர்கள் மேலும் பின்னடைவார்கள். ஆகவே மாணவரைப் பற்றித் தொடர்ச்சியாகத் தேடியறிதல் ஆரம்பத் தரக் கணிப்பீட்டின் முக்கியமான ஒரு பண்பாகக் கருதப்படுகின்றது.

**இறுதிக்கணிப்பீடு**

குறித்த ஒரு கற்றல் கட்டத்தின் முடிவில், மாணவர்கள் தமது கற்றலை எந்த அளவு வெற்றிகரமாக அடைந்துள்ளனர் என்பதைப் பரீட்சித்தலையே இறுதிக் கணிப்பீடு என்பர். இதன்படி வருடமொன்றின் இறுதியில், குறித்த வருடத்தினுள் கற்பித்த விடயங்களை உள்ளடக்கித் தயாரித்த வினாப்பத்திரம் ஒன்றின் மூலம் மாணவரின் அடைவைக் கணிப்பிட முடியும். எனினும் **இவ்வாறானதொரு கணிப்பீட்டு முறை ஆரம்பத் தரங்களுக்குப் பொருத்தமானது எனக் கருத முடியாது.**

ஆரம்பத் தரங்களில் நியதி (Criterion) சார் கணிப்பீடே நடத்தப்படுகின்றது. இங்கு ஆசிரியரால் மேற்கொள்ளப்படும் முறைசாரா நுட்பங்களில் கூடுதலான கவனஞ் செலுத்தப்படும்.

**நியதிசார் கணிப்பீடு**

கலைத்திட்டத்தின் உள்ளடக்கம், தேர்ச்சி ஆகியவற்றுக்கேற்பத் தயாரிக்கப்பட்ட நியதிகளை மாணவர்கள் அடைந்துள்ளனரா என்பதைப் பரீட்சித்தல் நியதி அடிப்படையிலான கணிப்பீடாகும்.

## 4.0 செயல் அடைவுக்கோவை

மாணவர்களைக் கணிப்பிட உபயோகிக்கக்கூடிய மிகவும் பயனுறுதியுள்ள ஒரு முறையாக இது கருதப்படுகின்றது. மாணவரின் கற்றல் தொடர்பான பிரச்சினைகளையும் அவர்களது திறன்களையும் தொடர்ச்சியாகக் கணிப்பிடும் ஒரு முறையாகிய இது அதிக முக்கியத்துவமு டையது. செயல் அடைவுக் கோவை என்பது மாணவனது திறமைகளும் அவன் கற்றலின்போது எதிர்கொள்ளும் சிரமங்களும் வெளிப்படும் வகையில் கருத்தாழத்துடன் தயாரிக்கப்பட்டுள்ள மாணவர் வேலைத் தொகுப்பாகும். இது மாணவர்கள் பற்றிய கருத்தை வெளிக்காட்டும் ஒரு கோவையாகும். செயல் அடைவுக் கோவை ஒன்றில் உள்ளடக்கப்பட வேண்டியவை யாவை? இதில் மாணவரது வேலைகளின் மாதிரிகள் (Samples) உள்ளடங்கும். எழுத்துவேலைகள், செய்த கணக்குகள், வரைந்த சித்திரங்கள், ஆக்கங்கள் ஆகியன இதில் உள்ளடக்கப்படலாம். மேலும் ஆசிரியரின் சிறு குறிப்புக்களையும் இதில் உள்ளடக்கலாம்.

## 5.0 சுருக்கக் குறிப்பு எழுதுதலும் செவ்வைபார்ப்புப் பட்டியல்களை உபயோகித்தலும்

ஓர் ஆசிரியர் தனது மாணவர்களின் முன்னேற்றத்தையும் கற்றல் இடர்பாடுகளையும் இனங்காண முயற்சிக்கும்போது அவர்கள் ஒவ்வொருவரையும் பற்றிய குறிப்புகளைச் சேகரித்து வைத்தல் அவ்வாசிரியருக்குப் பயனளிக்கும். செவ்வை பார்ப்பு பட்டியல்களைப் பயன்படுத்துதல் பயன்மிக்க மற்றுமொரு முறையாகும்.

## 6.0 தகவல் அறிக்கைப்படுத்தல் படிவமும் அதனைப் பயன்படுத்தலும்

சேகரித்த தகவல்களைக் குறித்து வைத்து அறிக்கைப்படுத்துவதற்காகப் பயன்படுத்தக்கூடிய படிவம் ஆசிரியர் வழிகாட்டியில் தரப்பட்டுள்ளது. அவற்றில் ஒவ்வொரு மாணவனின் பெயருக்கும் எதிரே, ஒவ்வொரு கற்றல் பேறுக்காகவும் ஒரு கட்டம் வீதம் ஒதுக்கப்பட்டுள்ளது. மாணவர்கள் அந்தந்தக் கற்றல் விளைவுகளை அண்மித்துள்ளனரா இல்லையா எனச் சோதித்தறிந்த பின்னர் அதனை இங்கு குறித்துக்கொள்ள வேண்டும். ஒவ்வொரு மாணவன் தொடர்பாகவும் ஒவ்வொரு கற்றல் பெறுபேறின் கீழும் நீங்கள் சேகரித்த தகவல்களின் உதவியுடன், பின்வருமாறு குறியீடுகளைப் பயன்படுத்தி அறிக்கை செய்யலாம்.

| முடிவு | குறியீடு |
|---|---|
| வெற்றிகரமாகச் செய்கிறார். | ✓ |
| இடர்ப்படுகிறார் / மேலும் உதவி தேவைப்படுகின்றது. | • |

யாதேனும் ஒரு கற்றற்பேறு தொடர்பாக மாணவர் வெற்றியைக் காட்டுகின்றனரா என்பதை ஆசிரியர் முடிவு செய்வதற்காகக் குறித்த கற்றற்பேறுக்குப் பொருத்தமானதாகத் தாமே தயாரித்த நியதிகளைப் பயன்படுத்தலாம். வகுப்பிலுள்ள எல்லா மாணவரது அடைவு மட்டங்களையும் பற்றிய முடிவுகள் ஒரே நியதித் தொகுதியை அடிப்படையாகக் கொண்டு எடுக்கப்படுமாயின் அவற்றின் ஒருசீர்த்தன்மை ஏற்படுவதால், உத்தேசப் பெறுபேற்றை அடைவது கடினமாக அமையலாம்.

## 7.0 கண்டறிதலும் பரிகாரமும்

முறைசாரா - தொடர் கணிப்பீட்டு முறையின் பிரதான நோக்கம் கண்டறிதலாகும். ஒவ்வொரு மாணவனதும் கணிப்பீட்டுப் படிவத்தில் ''• '' குறியீடு இடப்படும் ஒவ்வொரு சந்தர்ப்பம் தொடர்பாகவும் விசேட கவனம் செலுத்தப்படல் வேண்டும். மாணவன் எதிர்நோக்கும் இடர்ப்பாடுகளை இனங்கண்டு, அவற்றுக்குப் பரிகாரம் கண்டு, பின்னர் மீண்டும் கணிப்பீட்டுக்கு உட்படுத்தல் வேண்டும். குறித்த ''•'' எனும் குறியீடு, ''✓ '' எனும் குறியீடாக மாறும் வரை இச்செயற்பாட்டைத் தொடர்ச்சியாக நடாத்துதல் ஆசிரியரின் பொறுப்பாகும்.

இனங்கண்ட கற்றல் இடர்பாடுகளைத் தவிர்ப்பதற்கு அந்தந்தச் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமானவாறு சிறப்பான பரிகாரக் கற்றல் - கற்பித்தல் முறைகளை ஒழுங்கமைத்தல் முக்கியமானதாகும். இவை ஒவ்வொரு மாணவனும் காட்டும் கற்றல் இடர்ப்பாடுகளுக்கேற்பவே தீர்மானிக்கப்படலாம்.

இவ்வாறே குறிப்பிட்ட சில கற்றல் நோக்கங்கள் தொடர்பாக வகுப்பு மாணவருள் பெரும்பாலானோர் ''• '' குறியீட்டைப் பெற்றுள்ளனராயின், அதற்கு ஏதுவான காரணங்கள் பல இருக்க முடியும். அவற்றை இனங்கண்டு பொருத்தமான ஒரு நடைமுறையைப் பின்பற்றி மாணவர்கள் உரிய கற்றல் பேறுகளை அடையச் செய்வது ஆசிரியரின் பொறுப்பாகும்.

## 8.0 ஏனைய விடயங்கள்

- ✓ ஒரு மாணவனின் கற்றல் முன்னேற்றத்தை மற்றொரு மாணவனின் கற்றல் முன்னேற்றத்துடன் ஒப்பிடுவதன் மூலம் கல்வி ரீதியாக முக்கியத்துவம் பெறும் தீர்மானங்களை எடுத்தல் கடினமானதாகும். ஆகவே மாணவ - மாணவ அடைவுகளை ஒப்பிடுவதைத் தவிர்த்துக் கொள்ளுதல் அவசியமாகும்.

- ✓ ஒரு மாணவனின் தற்போதைய அடைவு மட்டத்தை அவனது முன்னைய அடைவு மட்டத்துடன் ஒப்பிட்டு, மாணவனது முன்னேற்றம் பற்றிய தகவல்களைப் பெறலாம். எனவே இது பற்றி அக்கறை செலுத்துவதோடு கலைத்திட்டத்தின் நோக்கங்களை எந்தளவுக்கு அடைந்துள்ளனர் என அறிதலும் அவசியமாகும்.

- ✓ தனது வகுப்பிலுள்ள மாணவர்களுக்குப் பொருத்தமான விதத்தில் கணிப்பீட்டு உபகரணங்களைத் தயாரித்துக் கொள்வதில் வகுப்பாசிரியர் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும்.

# சைவநெறி பாடக் கணிப்பீட்டுப் படிவம்

| | |
|---|---|
| வெற்றிகரமாகச் செய்கிறார். | √ |
| இடர்ப்படுகிறார் / மேலும் உதவி தேவைப்படுகின்றது | • |

| | | | | | மாணவரின் பெயர் |
|---|---|---|---|---|---|
| | | | | | 01. ஆனைமுகனை வணங்கியே கருமங்களைத் தொடங்குவார். |
| | | | | | 02. முழுமுதற் கடவுள் சிவபெருமான் என்பதை அறிந்து கூறுவார். |
| | | | | | 03. சிவபெருமானின் திருவருட் செயல்கள் சிலவற்றைக் கூறுவார். |
| | | | | | 04. பெற்றோரையும் பெரியோரையும் வணங்குவார். |
| | | | | | 05. பெற்றோருக்கும் முதியோருக்கும் உதவும் சந்தர்ப்பங்களை விவரிப்பார். |
| | | | | | 06. விபூதியை முறையாக அணிந்து காட்டுவார். |
| | | | | | 07. நாளாந்தம் சிவசின்னங்களைத் தரிக்கும் பழக்கத்தைக் கடைப்பிடிப்பார். |
| | | | | | 08. தீபாவளி கொண்டாடப்படும் முறையை விளக்குவார். |
| | | | | | 09. ஆலயத்திற்குச் செல்லுமுன் செய்யவேண்டியவற்றைக் கூறுவார். |
| | | | | | 10. ஆலயத்தில் நடந்துகொள்ளும் முறைகள் பற்றிக் கூறுவார். |
| | | | | | 11. ஆலய வழிபாட்டு ஒழுங்குமுறைகளைக் கூறுவார். |
| | | | | | 12. திருக்கோணேச்சர ஆலயத்தின் சிறப்புகள் சிலவற்றைக் கூறுவார். |
| | | | | | 13. பாடசாலை காலைப் பிரார்த்தனையில் ஈடுபடுவார் / தேவாரம் பாடுவார். |
| | | | | | 14. பாடசாலை சமய நிகழ்வுகள், விழாக்களின்போது உதவி செய்வார். |
| | | | | | 15. பாடசாலைச் சுவாமி மூலையைப் புனிதமாகப் பேணுவார். |
| | | | | | 16. திருமுறைப் பாடல்கள் பாடமுன் திருச்சிற்றம்பலம் கூறுவார். |
| | | | | | 17. தேவாரங்களை மனனஞ்செய்து பண்ணுடன் பாடுவார். |
| | | | | | 18. பெரியபுராணத்தைத் தனியாகவும் குழுவாகவும் ஓதுவார். |
| | | | | | 19. தெரிவுசெய்யப்பட்ட உலக நீதிப் பாடல் வரிகளை மனனஞ்செய்து கூறுவார். |
| | | | | | 20. சைவசமயக் கதைகளைத் தமது மொழிநடையில் இறை நம்பிக்கையுடன் முன்வைப்பார். |
| | | | | | 21. சைவசமயக் கதைகளில் வரும் கதாபாத்திரங்களில் சிலவற்றை நடித்துக்காட்டுவார். |
| | | | | | 22. உதவி தேவைப்படுவோருக்குத் தாமாக முன்வந்து உதவி செய்வார். |
| | | | | | 23. நாயன்மார்கள், அருளாளர்கள் சிலரைப் பற்றிக்கூற முன்வருவார். |
| | | | | | 24. உயிர்களிடத்தில் இரக்கம் காட்டுவார். |
| | | | | | 25. நடைமுறை வாழ்வில் சைவசமய ஒழுக்கங்களைக் கடைப்பிடிப்பார். |
| | | | | | 26. எல்லோருடனும் ஒற்றுமையாகவும் கூட்டாகவும் செயற்படுவார். |
| | | | | | 27. பூஞ்செடிகளின் அவசியத்தை உணர்ந்து அவற்றைப் பராமரிப்பார். |
| | | | | | 28. எல்லோரிடமும் நட்புடன் பகிர்ந்து உண்ணும் பழக்கத்தைக் கடைப்பிடிப்பார். |